உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
தனிப்பிரதி விலை ஒரு அணா

R. No. M. 3066

"PAHUTHARIVU"

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஆண்டு புரட்டாசி-மீ 8-உ (23—9—1934) | மலர் 5.

## விதவையர் விடுதலை முழக்கம்.

(தோழர் தி. அ. வேங்கடசாமிப் பாவலர்)

"கட்ட பொம்மு" மெட்டு.

(1) விதவைக்கொடுமை ஒழித்திடுவோம்
வீரவாழ்வெய்திச் செழித்திடுவோம்
விதவையர் துன்பம் பெருக்கிவிட்டோம்
வீணாய்நம் அன்பைச்சுருக்கிக்கெட்டோம்
மதிமோசம்போனோம் இதுவரையே
வன்கண்மை செய்திட்டோம் மாதரையே
புதியவுணர்ச்சிகள் பெற்றெழுந்தே
புரிவோம் சேவைபெண்கள் சார்பிருந்தே

(2) கன்னியர் துன்பம் தவிர்க என்றே
கடல்ச்சங்கநாதம் புரிவோம்இன்றே
அன்னியர் நாட்டில் விதவையில்லை
அன்ய மதத்தும்இத் தொல்லையில்லை
இந்நாட்டில் பால்ய விதவையர்கள்
இரண்டுகோடிக்கதிகம்உள்ளார்கள்
என்னநியாயம்இ தென்றுரைத்தால்
இந்து மதம்இதற் கென்சொல்லுமே.

(3) கிழவன்மட் டும்தன் மனைவிசெத்தால்
கெம்பீர மாய்மணம் செய்திடலாம்
இளம்பெண் கணவன் தனையிழந்தால்
ஏங்கிச்சும் மாஇருக் கவேண்டுமாம்
குழந்தைகைம் பெண்பெறக் கூடாதென்றே
குந்தகம் செய்திட்டீர் நன்றுநன்றே
பழங்கதை பாரதம் பார்க்கலையோ
பாண்டுவின் சங்கதி கேட்கலையோ.

(4) பாரதம் நித்தம் முழக்கிடுவீர்
பாண்டவர் தம்மைத் துதித்திடுவீர்
கூர்மதி யில்லாத கோழைகளே
குதிக்கின்றீர் வீணாய்இந் நாளையிலே
காரிகை மார்படும் துன்பமதைக்
கண்டும்கண் மூடிக்கொள் கின்றீர்இதை
மீறியே மாதரெல் லாம்எழுந்தார்
வெற்றி பெறச்சங்கம் ஊதுகின்றார்.

(5) ஆடவர்க் குள்ள சுதந்திரமே
அரிவையர்க் கும்தரல் பேரறமே
ஆடவர் தந்திட இல்லையென்றால்
அரிவையர் தாங்களே பெற்றிடுவார்
ஆடவர் மாயம்செல் லாதினிமேல்
அக்ரமத் தாலும் பலன்ஒன்றில்லை
ஆடவர் போலவே பெண்களெல்லாம்
அடிமைத் தளையை அறுத்தெறிந்தார்

(6) கருப்பு மனுஷரில் வீரர்களாம்
கள்ளர் மறவர் அகம்படியர்
விருப்ப முடனவர் பெண்களுக்கு
விதவை மணங்கள் அனுமதித்தார்
அறுத்து மறுமணங் கள்செய்கின்றார்
அவர்புவி யாளும் அரசரன்றோ?
சிறுத்த மனுஷரே! கைம்பெண்மணம்
செய்யில்ஏன் கூச்சல்செய் கின்றீர்நிதம்?

(7) பார்ப்பனர் தாம்வித வாமணங்கள்
பல்லா யிரக்கணக் காய்ச்செய்கின்றார்
வேர்ப்போர்உள் நாண"லா-கூர்" தனிலே
"விதவா விவாக சகாயசபை"
கூர்த்த "கங்-காராம்" எனும் புண்ணியர்
கோடி பொருள்கொண்டு மேயமைத்தார்
ஏற்கும் இதன்கிளை சென்னையிலும்
ஏற்பட் டிருக்கின்ற தென்றறிவீர்.

(8) கல்யாணம் செய்யும் விருப்பமுள்ள
கைம்பெண்கள் அச்சம் இனியொழிக
ஒவ்வாத வாழ்க்கையில் துன்புறுவோர்
உடனே "விவாகரத் து"ப்புரிக
எல்லோரும் கூடித் தடுத்திடினும்
இந்தச் செயலை இனிவிடாதீர்
வல்லப மாய்உங்கள் வாஞ்சையைப்போல்
மணம்செய்தின் பவாழ்க்கை வாழ்ந்திடுவீர்.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 |
| விவாக விடுதலை | 0-4-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சாமிகளின் அடிமை | 0-12-0 |
| லோகல்போர்டுஆக் (சென்னை) | 2-0-0 |
| பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு
ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பிரமச்சரியம் என்னும் பெயரால் பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கின்றன. விலை அணா 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,
ஈரோடு.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு 1 வருஷமாலை பைண்ட் செய்ததுகிரயம் ரூ. 3—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணா ஒன்று.

விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.

விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0

விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

# Problem of the Universe.

# பிரபஞ்ச பிரச்சினைகள்.

பிரபஞ்சத்தைப்பற்றிய பிரச்சினைகள் யாவை? பிரபஞ்சமென்றால் என்ன? இது முதல் பிரச்சினை. பிரபஞ்சத்தைக் கடவுளா படைத்தார்? இது இரண்டாம் பிரச்சினை. மனிதனும், மற்றுமுள்ள சீவவகைகளும், உலகில் தோன்றிய விதமென்ன? மனிதனுக்கு அவன் திரேகமன்றியில் உயிர் என்ற வேறு ஓர் தத்துவப்பொருளுண்டா? சீவன் உற்பத்தியான விதம் எப்படி? சீவனுக்கும், அசீவப்பொருளென்று கூறும் வஸ்துக்களுக்கும் என்ன வித்தியாசம். "மனம்" என்று கூறும் சொல்லுக்கும், "மனமற்ற" என்று சொல்வதற்கும் என்ன வித்தியாசங்கள் உண்டு? மனித திரேகம் எப்படி உண்டாயது? மனித "மனம்" எவ்விதம் வளர்ந்தது? சடமென்றால் என்ன? மரணமென்றால் என்ன? கடவுளுண்டா? மறுஜனனமுண்டா? நன்மை என்றால் என்ன? துன்மை என்றால்என்ன? நரக மோட்சங்களுண்டா? நீதி நியாயமென்றால் என்ன? நாகரீகமென்றால் என்ன? இத்தியாதி பிரச்சினைகளைத்தான், மதஸ்தர்களும், சமையவாதிகளும், மெய்ஞ்ஞானிகளும், தத்துவஞானிகளும், காலாகாலமாக வாதித்து வருகின்றனர். மெய்ஞ்ஞானம் (Science) இந்தப் பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்வதற்கு முந்தி, தத்துவஞானிகளும், மதஸ்தர்களுமே, இந்தப் பிரச்சினைகளைப் பற்றி வாதித்து வந்தனர். இன்றைக்கும் இவ்விரு கட்சியினரும் பலத்த விவாதம் செய்து வருகின்றனர். ஆனால் கடந்த 300 வருஷமாக மூன்றாம் பேர்வழி ஒரு கூட்டத்தார், இந்தப் பிரச்சினைகளுக்கு அனுபவ வாயிலாக விடை பகரக்கூடுமா வென ஆராய்ந்து வருகின்றார்கள். இவர்கள்தான் Scientists என்பவர்கள். இவர்கள் முறை என்ன? வெனில், ஒவ்வொன்றையும் பரீட்சித்துப் பார்த்து, அவைகளின் ஆதாரங்களைத் தெரிந்துகொள்வது. மழை எப்படி உண்டாகின்றது என்ற சாதாரணப் பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். மதஸ்தர்கள் கூறும்விடை யாதெனில், "இந்திர பகவான்" என்ற தேவனொருவனால் மழை உண்டாகின்றதென்பார்கள். அல்லது கிறிஸ்தவர் சொல்லுவது மாதிரி கடவுளால் மழை உண்டாகின்றதென்று கூறும் விடையும் ஒன்றுண்டு. இவ்விதமாக மதங்களும், தத்துவ ஞானிகளும் (Philosophers) இன்ன வஸ்து இன்னதென்று பரீட்சித்துப் பார்க்காமலே கட்டுக்கதைகளை, சாதாரண விஷயங்களாகிய இடி, மின்னல், மழை, காற்று இவைகளுக்குக் கட்டி விடுகின்றனர். இதனைப் பாமர மக்கள், நம்பி, மழைக்காக பூசை இடுவதும், இடி மின்னலுக்குக் காவு கொடுப்பதுமான மூடக்கிரிகைகளைச்செய்யத்தலைப்படுகின்றனர்.

ஆனால் மெய்ஞ்ஞானமோ வெனில், மழைத்தண்ணீரைப் பரீட்சித்துப் பார்த்து அது நிலத்தில் இருக்கும் தண்ணீரைப் போன்றது என்று தெரிந்துகொண்டு அதனை அனலில் காய்ச்சிப் பார்க்கின்றது. தண்ணீரைக் காய்ச்சினால் ஆவி ஆகிறது. அந்த ஆவியை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் பிடித்து வைத்தால் அது குளிர்ந்தவுடன், மறுபடியும் தண்ணீராக மாறுகிறது. மழைத் தண்ணீர் மேகத்திலிருந்து உண்டாகின்ற விஷயம் பிரத்தியட்சம். அந்த மேகத்தை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் பிடித்து குளிர் காற்றுப்படச்செய்தவுடன் அந்த மேக ஆவியும், தண்ணீராக மாறுகிறது. இந்தப் பரீட்சைகளால் மேகமும், ஜல ஆவி என்று தெரிகிறது. இந்த ஜல ஆவி குளிர் காற்றுப் பட்டவுடன் மழையாக மாறுகிறது என்று உணரலாம். பாத்திரத்திலுள்ள ஜலம் சூடுகை பட்டவுடன் ஆவியாக மாறுவதைப்போல், ஆறு, கடல், குளம், பள்ளங்களிலுள்ள ஜலமும் சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறி ஆகாயத்தில் மேகமாக உலாவுகின்றது. மேகத்தில் குளிர் காற்றுப் பட்டவுடன் மேகம், ஜலமாக வருஷிக்கிறது. இவ்விதப்பரீட்சைகளால் சூரிய வெப்பத்தால் ஜலம் ஆவியாகி குளிர் பட்டவுடன், திரும்பவும் ஜலமாகப்பெய்கிறது. இதுதான் மழை உண்டாகும் விருத்தாந்தம். இதற்குப் பூசை போட்டும் பலி இட்டும், துதித்தும் பயனென்னே? யாகங்கள் செய்தும் உபயோகமென்ன? ஆகாயத்தின் (Afmosphere) சீதோஷ்ண நிலைமையை மழையும் காற்றும் பொருந்தியுள்ளன. இதனை Thermometre, Barometre, என்ற இரண்டு கருவிகளால் நிரணயிக்கலாம். இடி, மின்னல், மழை இவைகளைப் பரீட்சை மூலமாக உண்டாக்கலாம். நீராவியைப்பிடித்து, அதில் மின்சாரத்தை நுழைய விட்டால், நீராவி ஜலமாக மாறும்போது சப்தத்துடனும், வெளிச்சத்துடனும் மாறுகின்றது. இது போலத்தான், மேக ஆவி ஜலமாக மாறும்போது இடியும், மின்னலுடன் மாறுதல் அடைகின்றது.

காற்று, வருண பகவான் உண்டாக்குவதாக மதஸ்தர்கள் கூறுகின்றனர். இதுவும் மேற்போந்த மதக் கற்பிதங்களைப் போன்றது. வருணன் யார்? அவனுக்கும், காற்றுக்கும் என்ன சம்பந்தம். இந்த சம்பந்தத்தை யார் தெரிந்துகொண்டவர்கள் இவைகளை விசாரிப்பதுமில்லை. யாரோ எழுதி வைத்தார்கள், அதை நம்புகின்றோம் என்ற வழக்கச்சொல்லைக் கொண்டு இன்றைக்கும் வருணனால் காற்று உண்டாகின்றது என்று சொல்லுகின்றார்கள்.

விஞ்ஞான விசாரணை செய்யத் துவக்கியதும், இந்திரன், வருணன் முதலிய தேவதைகள் பறந்தோடிப்போகிறார்கள். காற்றை விசாரணைக் குட்படுத்துங்காலை, காற்று இரண்டு மூன்று வகை ஆவிகளால் நிறைந்துளது. "ஆக்ஸஜன்" என்ற பிராண ஆவியும், நைட்ரோஜன்" என்ற வேறுவித ஆவியும் "கரிமூல வாயு" என்ற இனனொரு ஆவியும், சில கணக்குப்படி கலந்து, சீதோஷ்ண நிலைமைக்கு உட்பட்டு, தென்றலாகவும், வாடையாகவும், மேல்காற்றாகவும், மழைக் காற்றாகவும், (Monsoon) புயலாகவும், சுழல் காற்றாகவும் அடித்து வருகிறது. சிற்சில குறிகளைக்கண்டு மழை பெய்யும், புயல் அடிக்குமென்று நிர்ணயிக்கவும் கூடும். காற்று, மழை, இடி மின்னல், புயல், வெள்ளம் முதலிய இயற்கை சம்பவங்களை பரீட்சை மூலமாக அறிந்து, அவைகள் உண்டாகும் காரணங்களையும் தெரிந்து கொண்டு இவை இன்னவிதமாக இனி நடக்குமென்றும் சொல்லக்கூடும். சம்பவங்களின் காரணங்களைத் தெரிந்து கொண்டு, இன்னகாலத்தில் இன்ன சந்தர்ப்பத்தில் இன்ன சம்பவம் நடக்குமென்று முன்னதாகத் தெரிவிக்கும் சக்தி மெய்ஞ்ஞானமொன்றுக்கே உளதென அறிதல் வேண்டும்.

மெய்ஞ்ஞான விசாரணைக்கும், மத தத்துவ விசாரணைக்குமுள்ள வித்தியாசமென்னவெனில் மத தத்துவங்களுக்கு விசாரணை என்பதே கிடையாது. மெய்ஞ்ஞானத்திற்கு விசாரணையே ஆயுதம். மதங்கள் சம்பவங்களின் எதிர்கால நிலைமையைத் தெரிந்து சொல்ல முடியா. விஞ்ஞானத்திற்கு சம்பவங்களின் எதிர்கால நிலையைத் தெரிவிப்பதே அதன் முடிவு.

கடந்த 5000 வருஷமாக மதங்களும், ஆகமங்களும், வேதாந்தமும், இயற்கை சம்பவங்களை விசாரித்துணராமல், கற்பனை காரணங்களைக் கற்பித்துக்கொண்டு, பாமர மக்களை ஏமாற்றி வந்திருக்கின்றன. ஆனால் சென்ற 300 வருஷங்களாக, உள்ளதை உள்ளபடியாக விசாரித்து, தெரிந்த வரை சம்பவங்களின் காரண காரணங்களைத் தெரிவித்து வருகின்றது.

இன்னொரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்ளுவோம். பிளேக் என்ற (Plague) மகாமாரி நோயை எடுத்துக்கொள்ளுவோம். இந்த நோயைப்பற்றி சில ஆயிரம் வருஷங்களாக மனிதருக்குத் தெரியும். பண்டைக் காலங்களில் லட்சக்கணக்காக மக்கள் மடிந்து வந்தனர். ஆனால் மதங்கள் இந்நோயைப்பற்றி என்ன தெரிவித்து வந்தன? இந்த நோய், மகாமாரி என்ற தேவதையால் உண்டாவதாகவும், அதற்குக் காவு கொடுத்து, அந்த தேவதையைத் திருப்தி செய்யவேண்டுமென்றும் தெரிவித்து வந்தது. என்ன காவுகொடுத்தும், என்ன துதி செய்தும், என்ன யாகங்கள் செய்தும் பிளேக் ஒழிந்தபாடில்லை. ஆயிரம் வருஷ காலமாக கோடிக்கணக்கான மக்கள் இக்கொடிய நோயால் மாண்டு வந்தனர். சென்ற 50 வருஷங்களுக்குள்தான் விஞ்ஞானம் இந்நோயை விசாரிக்க ஆரம்பித்தது. இந்த விசாரணையில் பிளேக் நோய் ஒரு சிறு கிருமியால் உண்டாகின்றதென்றும், அக்கிருமி எலி மூலமாக மனிதனுக்குத் தொத்துவதாகவும், இந்தக் கிருமிக்கு அழுக்கு, நாற்றம், முதலிய அசுசிகள் ஆதாரமென்றும், விளங்கியது. அது முதல் இக்கொடிய நோயை விஞ்ஞான

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க,

# சகலத்வாலா

## சோவியத் ரஷ்யாவில் கண்டதென்ன?

(C. R. D.)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ட்ஸார்கொடுங்கோன்மையினின்று விடுதலை.

ஆசியா ப்ரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள மலைகளிலும், பாலைவனங்களிலும் வசிக்கும் ஜனங்கள் புரட்சிக்கு முன் எப்படி இருந்தார்கள் என்பதையும் புரட்சிக்குப்பிறகு அவர்கள் இன்று இருக்கிற நிலைமையையும், ஒத்திட்டுப்பார்ப்போமானல் சோவியத் ஆட்சியின் வெற்றி மாஸ்கோவில் பிரகாசிப்பதற்குமேல் பதின் மடங்கு அங்கு பிரகாசிக்கின்றதைக் காணலாம். ஐரோப்பாவைச் சேர்ந்த ரஷியாவைவிட, ஆசியாவைச் சேர்ந்த ரஷியாவில் தொழிலாளராட்சி அதிக உறம் பெற்றிருக்கிறது.

கிர்க உஸ்பெக்ஸ் என்றும், டாட்கிக்ஸ் என்றும், டர்க்கிமான்ஸ் என்றும் இன்னு மிது போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த மலை வாசிகளின் நிலைமை ரஷியப்புரட்சிக்கு முன் எவ்வாறிருந்ததென்று கவனிப்போம். மேற்சொன்ன மலைவாசிகளின் மேல் முதலாளித்தன்மை ஏகாதிபத்தியம், மதம் ஆகிய இம் மூன்றும் தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்தி அம் மக்களின் உழைப்பின் பலனை எல்லாம் நோகாமல் உண்டு கொழுத்து வந்ததோடு நில்லாமல் அவர்களை அடக்கி ஒடுக்கியும் வைத்திருந்தன. அதுமட்டுமல்ல. அவர்களை மனித உருவம் பெற்ற மிருகங்களாகவும் மதித்து நடத்தின.

1917-ம் வருடம் ரஷியாவில் தொழிலாளர் புரட்சி கிளம்பியபோது விரட்டியடிக்கப்பட்ட சோம்பேரி முதலாளிப் புல்லுருவிகள் நாகரீகமே இன்னதென்று அறியாமல் சகல துறைகளிலும் அறியாமையால் மூழ்கிக்கிடந்த மலை வாசிகள் நிறைந்த சோவியத் ராஜ்யத்தின் தெற்கு பாகங்களுக்குச் சென்று அம் மக்களின் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி பழையபடி வாழ முயன்றனர். "தூங்குகிறவன் தொடையில் கயிர் திரித்த வரையில் லாபந்தானே." இப்படியும் சிறிது காலம் காலக்ஷேபம் நடந்தது. உடனே மக்களும் விழிப்படைந்தனர். அவ்விழிப்பின் பயனாக வெற்றி பெற்றனர். புரட்சிக்காரர்களும் முதலாளிகளை அவர்கள் ஒண்டச் சென்றவிடங்களுக்கெல்லாம் சென்று விரட்டியடித்து பாட்டாளர் வெற்றிக் கொடியை உயர்த்தினர். கிராமாந்தரங்களுக்குப், தொழிற்சாலைகளுக்கும் இன்று சென்று அங்குள்ள சற்று வயது சென்ற ஆண்களையும், பெண்களையும் புரட்சி காலத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றி சொல்லும்படி கேட்டு விட்டால் போதும். ஆரம்பித்து விடுவார்கள் நீண்டகதையை. அதிலும புரட்சிக்கு விரோதிகளோடு எப்படி அவர்கள் சண்டை செய்தார்கள்? எவ்வெப்படி அவர்களை விரட்டியடித்தார்கள்? என்பவைகளைக்குறித்து விசாரிக்கும் போது அவர்கள் கண்களிலிருந்து தீப்பொரிகள் பறப்பது போல எவ்வளவு உணர்ச்சியோடு அப்புரட்சிச் சம்பவங்களைச் சொல்லுகிறார்கள் தெரியுமா?

சுருங்கக் கூறவேண்டுமானல் லெனினுக்கு உதவியாக நின்ற புரட்சிக்காரர்கள் பல நூற்றாண்டுகளாக வேரூன்றிக் கிடந்த அக்கிரம அட்டூழியங்களை ஒரே நாளில்வெட்டி வீசி விட்டனர். பத்து வருட காலங்களாக கடும்போர்களுக்குப் பின்னடையாமல், துன்பங்களுக்குச் சலியாமல், கொடும் பசியையும் சட்டை செய்யாமல் சந்தோஷமாகச் சகித்துக் கொண்டு, தங்கள் வீடுகள் தங்களின் கண்முன்பேகொளுத்தப்படுவதையும், தங்களின் ஆடு மாடுகள் மற்றும் தங்களுக்குச்சொந்தமான பொருள்கள் அபகரிக்கப்படுவதையும், கொள்ளையிடப்படுவதையும் சகித்துக்கொண்டு ஒன்றுக்கும், எப்படிப்பட்ட கஷ்ட நஷ்டத்துக்கும் மனந்தளர்ந்து பின்னடையாமல் ஒரே பிடியாக, திடகாத்திரமாக தங்களின் புரடசி வெற்றியடையவேண்டுமென்ற நோக்கத்திலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தனர். கெரன்கி என்பவர்புகுத்தப்பார்த்த புரட்சியின் போலித்தன்மையையும், குலாக்ஸ் என்பவரால் கொண்டு வந்தபோலிச் சமதர்மத்தின் சாரமற்ற தன்மையையும் புரட்சிக்காரர்கள் உணர்ந்து கொண்டு அவைகளைப் புறக்கணித்து லெனினல் கொண்டு வரப்பட்ட பொதுவுடைமைத்தத்துவமேசாலச் சிறந்ததெனத்தெரிந்தனர்.

நிலமற்றவர்களுக்கு நிலம், தொழிலாளருக்குத் தொழிற்சாலைகள் மக்கள் யாவருக்கும் பசி தீர உணவு; பாட்டாளிகளுக்குப் பூரண அதிகாரம், பாடுபட இஷ்டமில்லாத சோம்பேரி வர்க்கத்தினருக்குத் திண்டாட்டம் ஆகிய இவைகளே பொதுவுடைமைக் கொள்கையின் சாதாரணமாகக் கருதக்கூடிய அம்சங்களாகும். இவைகளின் அவசியத்தை உணர்ந்து பூர்த்தி செய்யப் புரட்சிக் கார்ர்கள் முற்பட்டனர். வெற்றி பெற்றனர். ஒப்பற்ற புரட்சித்தலைவர் லெனினும் மறைந்தார். தலைவர்கள் மறைந்தாலும் புரட்சி என்றும் மறைவதில்லை யாகையால் தலைவர் ஸ்தானத்திற்குஸ்டாலின் வந்தார். இவர்லெனினல் துவக்கப்பட்ட புரட்சியைப்பூர்த்தி செய்து சமதர்ம முறைப்படி சமூகத்தை அமைத்து அதைத் தொழிலாளிகளின் ஆட்சியின்கீழ் கொண்டுவந்து நிலை நிறுத்தி விட்டார்.

வியக்கத் தகுந்த முன்னேற்றம்.

ரஷிய மக்கள், பல நூற்றாண்டுகளாகத்தங்களைக்கசக்கிப் பிழிந்து வந்த பயங்கரக்கொடுமைகளை, தங்கள் பலத்தாலும், புரட்சியாலும் பஞ்சாய்ப்பறக்கடித்துமனித உணர்ச்சியையும்,பூரணமனித உரிமையையும், மனித விடுதலையையும் இச்சொற்ப காலத்தில் (அதாவது இந்த 17 வருடங்களுக்குள்) பெற்று விட்டார்கள். என்று நான் சொன்னல் நீங்கள் நம்பமாட்டீர்கள். நீங்கள் நம்பாவிடினும் நான் சொல்வது உண்மை. இந்த முன்னேற்றம் அவ்வளவு ஆச்சரியமாய் இருக்கிறது. அந்தஜனங்கள் (ஆண்களும், பெண்களும், சிறியோரும, பெரியோரும்) சிறு சிறு கூட்டங்களாகச் சேர்ந்து கொண்டும், தனித் தனியாகவும், விஷய ஞானம் பெறும் பொருட்டு ஊர்கள் தோறும் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள்.

### கலைகள்.

எழுத்துக்கள் இல்லாத விடங்களில் புதிய எழுத்துக்கள் சிருட்டிக்கப்படுகின்றன. புதிய இலக்கியம் மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வருகிறது. புதிய இலக்கியங்களைக்கொண்ட புத்தகங்கள் ஆயிரக்கணக்காகப் பிரசுரிக்கப்படுகின்றது. முதலாளித்துவ முறைப்படி ஆளப்படும் நாடுகளிலெல்லாம் எங்கோ ஒரு சிலரே அதுவும் சில பணக்காரர்களும், படித்தவர்களுமே தினசரிப்பத்திரிகைகளைப் படிக்கிறார்கள் ஆனல் ரஷியாவில் பத்திரிகை படிக்காத மனிதனே கிடையாது. பத்திரிகைபடிப்பதுஎன்பது வர்களுக்குசுவாசம்போல்ஆகி விட்டது. ரஷியர்கள் தினசரிப் பத்திரிக்கைகளைப்படிப்பதோடு மட்டும் நிற்காமல் தாங்களாகவே பத்திரிக்கைகளையும் செய்கிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலையும், ஒவ்வொரு பள்ளிக்கூடமும் (அதில் பாலர் வகுப்புகளும்கூட) ஒவ்வொரு பண்ணையும், ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு தொழிலாளர் சங்கமும், தாம் தாமாகவே சுவரொட்டிப் பத்திரிக்கைகளைதினசரி செய்கின்றன.

### விஞ்ஞானம்

ரஷிய ஜனங்கள் விஞ்ஞானத்தையும், எஞ்சினீரிங்கையும் கற்றுக்கொள்ள அதற்கான பள்ளிக்கூடங்களுக்கு (Technical schools) ச் செல்லுகின்றனர். முன்பு, பைசைகில்களையும், கடியாரத்தையும், பேனகத்தியையும் கூட தங்கள் வாழ் நாளில் ஒருபோதும் பார்த்தே இராத ஜனங்கள் இப்போது பெரிய பெரிய இயந்திரங்கள் முன்னே நின்று, அவைகளை முடுக்கி ஓட்டிச்செய்து அவைகளிடமிருந்து வேலை வாங்குகிறார்கள். பஞ்சு ஆலைகள், பட்டு ஆலைகள், செருப்புத் தொழிற்சாலைகள், காய் கறி எண்ணெய்த் தொழிற்சாலைகள், டீ தொழிற்சாலைகள், ஹைட்ரோ-எலக்ட்டரிக் வேலைகள், அச்சு வேலைகள், புகைவண்டிகள் முதலியவைகளை ரஷியர்கள் மிகவும் வெகு அலக்ஷியமாக செய்தும், கட்டியும் விடுகிறார்கள். வீட்டறைகளில் அடைந்து கிடந்த இளம் பெண்களும், யுவதிகளும் இன்று பயங்கரமான இயந்திரங்களை ஓட்டுகின்றார்கள். பரீக்ஷைகளில் தேரி எஞ்சினீயர்களாகவும், இயந்திரங்களை ஓட்டுவதில் திறமைவாய்ந்த போர்விமென்க(Forewomen)ளாகவும் வெளி வருகிறார்கள். உதாரணமாக 1920ம் வருடம் வரையில் பாமரத் தன்மையிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடந்த ஒரு ஆசியமாது இன்று பகு- ஆயில்-ரிபைனரி (Baku-Oil-Refinery) என்னும் தொழிற்சாலையில் தலைமை சூப்ரெண்ட் வேலை பார்க்கிறார். இது தொழில்களிலெல்லாம் மிகவும் கஷ்டமானதும் சிக்கலானதுமான தொழில். இதுபோன்ற காட்சியை ரஷியாவில் எங்கும் காணலாம்.

---

### ஸ்பெயினில் கவலைக்கிடமான நிலைமை.

ஸ்பெயினில் பலாத்காரம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. வாரக்கடைசிக்குள் கவர்ன்மெண்டு ராஜிநாமாச்செய்யநேரலாம். கவர்ன்மெண்டு எல்லாத்தரப்பினராலும் தாக்கப்படுகிறது. அபேத வாதிகள் ஏராளமான குண்டு பீரங்கிகள் தயாரித்து வருகிறார்கள். 73 தோட்டாப்பெட்டிகளை வண்டி யேற்றும் போது இரண்டு அபேத வாதப்பிரதிநிதிகள் மேற்பார்வையிட்டுக்கொண்டிருந்தனர். காவல் படை உடனே அவர்களைத் தாக்கி ஜனப்பிரதிநிதிகள் உள்பட 26 பேரைக் கைது செய்தது. இப்பால் ஜனப்பிரதிநிதிகள் விடுதலை செய்யப்பட்டன ராயினும், மற்றவர்கள் வெடி மருந்துடன் ஓடி விட்டனர்.

---

### டாக்டர் நாயுடு

### நாட்டறம்பள்ளி விஜயம்.

4-9-34ந்தேதி காலை 9-30மணி சுமாருக்கு கனம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களும், திருப்பத்தூர் பிரபல வக்கீல் தோழர் ஜி. சாமி நாயுடு அவர்களும், ஜோலார்பேட்டை "சமதர்மம்" பத்திராதிபர் தோழர் வி. பார்த்தசாரதி அவர்களும் கிராமத்திற்கு விஜயமாகி டில்லி சட்டசபைத் தேர்தல் விஷயமாக வாக்காளர்களுடன் கலந்து பேசியும் நாட்டறம்பள்ளி பஞ்சாயத்து போர்டுபிரஸிடெண்டு அவர்களுடன் பஞ்சாயத்து உயர்தர ஆரம்பப் பாடசாலைக்குச் சென்று பார்வையிட்டுச் சென்றனர்.

(சு. த.)

# காந்தியாரின் அறிக்கைச்சுருக்கம்.

# இன்னமுமா சந்தேகம்?

## "குடி அரசு" "புரட்சி" "பகுத்தறிவு" சொல்லி வந்தது இப்போதாவது உண்மையாயிற்று?

காங்கிரஸ்காரர்கள்' பெரும்பாலோர் எனது வேலைத்திட்ட முறையைப்பின்பற்றி அலுத்துப்போய் விட்டார்களென்று நான் உணர்கிறேன். காங்கிரஸின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறேனேயன்றி, உதவியாக இல்லை என்றும் காங்கிரஸ், தனிப்பட்ட ஒருவனது ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகி விட்டதென்றும், படித்த காங்கிரஸ்காரர்களிடையே அபிப்பிராயம் நிலவி வருவதாக நான் எண்ணுகிறேன்.

ஏனெனில்பலகாங்கிரஸ்காரர்களுக்கும், எனக்கும் பலமான அபிப்பிராய பேதங்கள் இருக்கிறது. படித்தகாங்கிரஸ்காரர்கள் பலர் வாயைத்திறக்காமல் என்னிடம் விசுவாசம் காட்டினாலும் அந்த விசுவாசமானது அவர்களுடைய சொந்த எண்ணத்துக்கு ஓர் தடையாகவே இருக்கிறது. காங்கிரசிலுள்ளபடித்தவர்களுக்கும், எனக்கும் அடிப்படையான அபிப்பிராய பேதங்களிருப்பதாகவே நான் எண்ணுகிறேன்.

### கை ராட்டினம் கத்தர்.

### பூரண சுயேச்சைக்கு வழி.

காங்கிரஸ்காரர்களில் படித்தவர்கள், கையால் நூற்கும் வழக்கத்தை அடியோடு விட்டு விட்டார்கள். அவர்களுக்கு அதில் நம்பிக்கையில்லை. காங்கிரஸ் சந்தாவுக்கு தினமும் கையால் நூற்கும் விதியை நான் ஏற்படுத்த விரும்புவேன். வழக்கமாக கத்தர் உடுத்துபவர்களே, காங்கிரஸ் கமிட்டி தேர்தல்களில் ஓட் செய்யலாமென்பது காங்கிரஸ் விதி. இவ்விதியானது ஆரம்ப முதலே அநேகமாக செத்து விட்டது. கத்தர் விதியை பெயரளவில் அனுஷ்டிக்க,. பல விடங்களிலும் நடக்கும் உண்மையற்ற காரியங்களையும், போலிக்கூற்றுகளையும் பல காங்கிரஸ் வாதிகள் எனக்கு எடுத்துக்கூறி இதற்கெல்லாம் நானே ஜவாப்தாரி என்றும் கூறுகிறார்கள். அவர்கள் இவ்விதம் கூறுவதில் அதிக உண்மை இருக்கிறதென்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும்.

கத்தர் விதியிருந்தால் அதை கண்டிப்பாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். காங்கிரஸ் காரர்களிடையே பெரும்பான்மையோருக்கு இதில் உண்மை நம்பிக்கை இல்லை ஆதலால் இவ்விதியை அமுலுக்குக் கொண்டுவர முடியாது.

### பார்லிமென்ட் போர்டு.

நிற்க, பார்லிமென்ட் போர்டை எடுத்துக் கொள்வோம். இவ் விஷயமாகவும நம்மிடையே தீவிர அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. பாடலீபுரத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திலே நான் என் வேலை திட்டத்தை வற்புறுத்தியதானது நமது மேலான சகாக்களின் மனதைக் கஷ்டப்படுத்தியதென்பதை நான் அறிவேன்.

### சமதர்ம கட்சி.

சமதர்ம கட்சி ஏற்படுத்துவதை நான் வரவேற்றிருக்கிறேன். அதில் சேர்ந்த பலர் கௌரவஸ்தர்கள் தியாகம் செய்யும் சகாக்கள். ஆனாலும், அவர்கள் தங்கள் வேலைத் திட்ட விஷயமாக வெளியிட்ட அறிக்கையில், எனக்கு அடிப்படையான வேற்றுமைகளிருக்கின்றன. அவர்கள் பிரசுரத்திலுள்ள கொள்கைகள் பரவுவதை என் செல்வாக்கைக் கொண்டு நான் அடக்கி விட விரும்ப வில்லை. ஆனால் காங்கிரசிலே அதன் ஆதிக்கம் வலுத்தால், நான் காங்கிரசிலே இருக்க முடியாது.

### இந்திய சமஸ்தானங்கள்.

நிற்க, இந்திய சமஸ்தானங்கள் விஷயமாக நான் கூறி வந்திருக்கும் கொள்கைக்கு நேர்மாறாக எனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

### தீண்டாமை விலக்கு.

தீண்டாமை விலக்கு விஷயத்திலுங்கூட எனது வேலை பல காங்கிரஸ்காரர்களின் முறைக்கு மாறுபட்டதாக இருக்கிறது.

### அகிம்சை.

கடைசியாக அகிம்சா தர்மம் பெருவாரியான காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு வேலைத்திட்டமாக இருக்கிறதே தவிர அதில் உண்மையான நம்பிக்கை இல்லை. ஆனால் நான் இதை ஓர் தர்மமாக அனுஷ்டிக்கிறேன். காங்கிரஸ்காரர்களின் வாழ்க்கையிலே அகிம்சா தர்மம் இன்னும் ஓர் அம்சமாகவில்லை.

### சட்ட மறுப்பு

அகிம்சையைப்பற்றியே சந்தேகமிருக்கையில், சட்டமறுப்பைப்பற்றி அதிக சந்தேகமிருப்பதில் ஆச்சரியமில்லை. இவ் விஷயத்தில் நானொருவனே நிபுணனாகையால், (எவ்வளவு குறைகளிருப்பினும் சரி) கொஞ்ச காலத்திற்கு, சட்ட மறுப்பு இயக்கத்தை என் மட்டில் கைக்கொள்ளுவதென்று நான் தீர்மானித்திருப்பதில் ஆச்சரியமொன்றும் இல்லை.

பலர் மகத்தான தைரியத்தையும் ஆத்ம தியாகத்தையும் காட்டியிருக்கிறார்கள் என்றாலும் அகிம்சையானது பரிசுத்தமானதாக இல்லை என்பதையே நான் அறிவுறுத்த விரும்புகிறேன்.

இவ்வித மகத்தான முக்கிய விஷயங்களில் மனக் கஷ்டத்துடனே ஓட்டுகளை கசக்கி வாங்குவதென்பது சற்றும் போதியதல்ல. இவ் விதம் செய்வது இந்த இயக்கத்திற்கே பாதகம் செய்தாலும் செய்யும்.

பொதுவான லட்சியத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன் எல்லா காங்கிரஸ்காரர்களும் இதை சரிவர உணர்ந்திருக்கிறார்களா என்பதில் எனக்கு இப்பொழுது சந்தேகம் தோன்றி இருக்கிறது.

பூரண சுயேச்சை என்னும் "இண்டிபெண்டன்ஸ்" என்னும்இங்கிலீஷ் பதத்திற்கு ஆங்கிலத்திலேஎன்னகருத்தோ அவையனைத்தையும் உள்ளிட்ட இந்தியாவுக்கு சுயேச்சை வேண்டுமென்று நான் கூறுகிறேன். பூர்ண சுயேச்சை என்பதைவிட பெரியதென்பதே எனது கருத்து.

### சுயராஜ்யம்.

சுயராஜ்யத்தின் லட்சியம் என்னவென்று என்னால் கூற முடியாமலிருப்பது பல காங்கிரஸ் வாதிகளுக்கும் எனக்கும் பெரும் அபிப்பிராய பேதம் ஏற்படுவதற்கு மற்றொரு காரணமாக விருக்கிறது.

### எல்லைப்புறத்திற்குப் போகிறேன்.

இவ்வித அபிப்பிராய பேதங்களாலேயே தற்போதுள்ள காங்கிரஸ் வேலைத்திட்டம் உயிரற்றதாக யிருக்கிறது. வேலைத்திட்டத்தை உண்மையில் நம்பாமலே அதனை ஏற்றுக் கொண்டதாக காங்கிரஸ் வாதிகள் கூறி வருகின்றனர். என்னைப்பொறுத்த வரையில் நான் இந்திய கிராமம் ஒவ்வொன்றிலும் எனது சேவையைக் குறிப்பிடும் பட்சத்தில், வடமேற்கு எல்லைப்புற கிராமமொன்றில் வாசம் செய்து தொண்டு செய்ய விரும்புகின்றேன்.

### காங்கிரஸில் ஊழல்.

காங்கிரஸ் வாதிகளான நம்மிடை ஊழல் அதிகரித்து வருகிறது. இது பற்றி நான் பகிரங்கமாகப் போதிய அளவு கூறியிருக்கின்றேன். இந்நிலையில் காங்கிரசில் சேர்ந்திருப்பதைவிட அதற்கு வெளியே இருப்பதால் தேசத்திற்கு சிறந்த சேவை புரியலாமென்று நன்கு உணர்ந்தால் தான், நான் காங்கிரசிலிருந்து வேளியேறுவேன்.

### "எனது தீர்மானங்கள்"

மேலே கண்ட அபிப்பிராயங்களை வற்புறுத்தும் சில தீர்மானங்களை காங்கிரஸ் மகாநாட்டு விஷயாலோசனை கமிட்டி முன்பு சமர்ப்பிப்பதன் மூலம் காங்கிரஸின் அபிப்பிராயம் என்னவென்பதைப்பரீட்சை செய்து பார்க்க உத்தேசித்துள்ளேன்.

1. பூரண சுயராஜ்யம்பெற "சட்ட ரீதியானதும், அமைதிகரமானதுமான முறைகளை அநுசரிப்பது" என்பதை "முற்றிலும் சத்தியமும், அஹிம்சா தர்மமும் தழுவிய முறைகளை அநுசரிப்பது" என்று மாற்ற வேண்டுமென்று நான் முதல் முதலாக திருத்தப் பிரேரணையொன்று கொண்டுவர உத்தேசித்துள்ளேன். நான் அப்படிச் செய்யவே கூடாது ஆனால் நான் "சட்ட ரீதியானதும்அமைதிகரமானதும்!" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "சத்தியமானதும் அஹிம்சா தர்மம் பொருந்தியதும்" என்ற வார்த்தைகளை உபயோகிப்பதற்குப் பலமான எதிர்ப்பு ஏற்பட்டு வருவது பற்றியே மேலே குறிப்பிட்ட திருத்தப் பிரேரணை கொண்டுவரப் போகின்றேன். நமது லட்சியம் பூர்த்தியாக சத்தியமும் அஹிம்சா தர்மமும் அவசியமென்பதை காங்கிரஸ் வாதிகள் உண்மையில் நம்புவார்களேயானால் அவ்விரு வார்த்தைகளையும் ஏற்றுக் கொள்ளச் சிறிதும் தயங்கவே கூடாது.

### அங்கத்தினர் சந்தா.

2. 4 அணா சந்தா செலுத்துவதற்குப்பதிலாக மாதா மாதம் ஒவ்வொரு காங்கிரஸ் அங்கத்தினரும் தாமே நூற்ற 8000 அடி நூலை சந்தாவாகச் செலுத்த வேண்டுமென்று நான் இரண்டாவது திருத்தப்பிரேரணை கொண்டு வருவேன்.

கத்தா விதியை அநுசரிப்பதில்வெட்கமில்லாமலே மோசகரமாக காங்கிரஸ் வாதிகள் நடந்துகொள்வது சகிக்கத் தக்க விஷயமல்ல.

### ஓட்டுரிமைக்கு நிபந்தனை

3. காங்கிரஸ் ரிஜிஸ்டரில் 6மாத காலம் தொடர்ச்சியாக பெயரில்லாதவரும், அக் காலம் முழுவதும் வழக்கமாககத்தர் அணியாதவருமானஎந்த காங்கிரஸ்வாதியும்தேர்தலில்ஓட்டளிக்க உரிமை இல்லையென்று நான் மூன்றாவது திருத்தப் பிரேரணை கொண்டுவரப் போகிறேன்-

### அதிக பிரதிநிதிகள் ஏன்?

4 காங்கிரஸ் மகாநாட்டுக்கு 6000 பிரதிநிதிகள் உண்டு ஆனால் அவ்வளவு பேரும் ஒரு பொழுதும் காங்கிரஸ்மகாநாட்டுக்குவந்ததில்லை. எந்த இடத்திலும் காங்கிரஸ் ரிஜிஸ்டரில் உண்மையான பிரதிநிதிகளின் ஜாபிதாவைக் காணவே முடியாது. ஆகவே காங்கிரஸ் மகாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகள் தொகையை ஆயிரமாகக் குறைக்க நான் திருத்தப்பிரேரணைகளை கொண்டு வரப்போகின்றேன்.

### உண்மை ஜனநாயக தத்துவம்

தற்போது ஜன நாயக தத்துவத்தால் ஊழலும், புரட்டுமே மலிந்துள்ளன. ஊழலும், புரட்டும் ஒழிய

தொடர்ச்சி 15ம் பக்கம்பார்க்க

# சுயமரியாதைத் :: :: திருமணங்கள்.

## பௌளும்பாள்—அழகப்பா திருமணம்.

16-9-34-ந்தேதி மாலை 4-30 மணிக்கு திருச்சி, தென்னூர் ஆண்டிப்பட்டி ஜமீன்தார் பெத்தாச்சி செட்டியார் பங்களாவில் திருச்சி தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கத்தின் ஆதரவில்ஈரோடுதோழர் ஈ வெ. ராமசாமி அவர்கள் தலைமையில்தோழர்களான எம்.கே. அழகப்பாவுக்கும், டீ பௌளும்பாளுக்கும் சுயமரியாதை முறையில் மண ஒப்பந்தம் நிறைவேறியது. திருமணத்திற்கு ஏராளமான ஆண்களும், பெண்களும் விஜயம் செய்திருந்தனர்.

அவர்களுள்:— சிறுகூடல் பட்டி என். இராமநாதன், அழகம்மாள் தம்பதிகள், கோட்டையூர் ரங்கம்மாள் சிதம்பரம் தம்பதிகள், திருச்சி நீலாவதி ராமசுப்பிரமணியம், சென்னை சுந்தரி அருணகிரி, காரைக்குடி விசாலாட்சி ராம சுப்பையா, லட்சுமிவரம் ந. சா. அருணாசலம் செட்டியார், கொத்தமங்கலம் ராம நாராயண செட்டியார், நா. அருணாசலம் செட்டியார், நா. அண்ணாமலை செட்டியார், அரிமளம் ஆதிலட்சுமி தேனப்பா தம்பதிகள், பள்ளத்தூர் பொன்னம்மாள் அருணாசலம் தம்பதிகள், விருமதி பெரி. சு. இராமநாதம் செட்டியார், கோட்டையூர் நா. கா. சித. நாச்சியப்ப செட்டியார், ராம. மு. வள்ளியப்ப செட்டியார், பெ. க. சு. சித. சிதம்பரம் செட்டியார், அ. மு. சுப. சித. கருப்பஞ் செட்டியார், ராயவரம் சு. கதி. கதிரேசன் செட்டியார், அரிமளம் அ. செ. சு. ராம. சாமிநாதன் செட்டியார், எல். சோமசுந்தரம் செட்டியார், கொத்தமங்கலம் வெ. அரு. அருணாசஞ் செட்டியார், காரைக்குடி சொ. நாராயணன் செட்டியார், அரிமளம் சி. பெ. கா. பெரிய கருப்பஞ்செட்டியார், கி. ராம. நா. நாராயணன் செட்டியார், ராயவரம் சு. க. சுப்பிரமணியன் செட்டியார், காந்திபாடசாலை உபாத்தியாயர் ராம. சுப்பிரமணியம், காரைக்குடி சித. க. கதிரேசன்செட்டியார், ராய. சித ராம. சொக்கலிங்கம் செட்டியார், சென்னை சி. டீ. நாயகம், ஜி. பார்த்தசாரதி, கே. பிரமச்சாரி எம். ஏ., எல். டி., புதுக்கோட்டை வக்கீல் முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ., பி. எல், (எம். எல். சி.,) ராஜாம்பாள் வாசுதேவன் தம்பதிகள், சென்னை மாகாண சலவைத் தொழிலாளர் சங்கத்தலைவர் பி. சோம சுந்தரம், திண்டுக்கல் 'சன்மார்க்கன்' ஆசிரியர் சுவாமி சிவ நேசம், எஸ். அபிமன்னன், டி. வி. சன்னாசி, கே.கலியபெருமாள், புதுப்பாளையம் பி. ஆர். குப்புசாமி, குஞ்சம்மாள், பிபாரிஜாதம், சிப்பய்மாள், சின்னாச்சி, பகவதியம்மாள், சிவக்கொழுந்து, லட்சுமியம்மாள், செல்லத்தம்மாள், ஆரோக்கியமரி, அகிலம்மாள், நாகம்மாள், ருக்மணி, அங்கம்மாள், ராமம்மாள், கமலம், தனம், நாகம்மாள், ராஜம் முதலியவர்களும் வந்திருந்தனர். மணப்பெண்ணின்பெற்றோர்களும், சுற்றத்தவர்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

திருமணத்திற்கு வரமுடியாமல் தந்திகளும், வாழ்த்துச்செய்திகளும் அனுப்பிய தோழர்கள்:—

சென்னை 'ஊழியன்' ஆசிரியர் ராயசொக்கலிங்கன், யூனிவர் சிட்டி புரொபெசர் ஏ ஜி. உசேனி எம். ஏ., சி., பஞ்சாட்சரம், மைலை சீனி. வெங்கிடசாமி, எஸ். குருசாமிபி.ஏ., எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி., சுப்பிரமணியம், எம். சிங்காரவேலு பி. ஏ., பி. எல்., ராணி அண் கோ டி. என். ராமன், எம். ஹரி, சுயமரியாதை இளைஞர் மன்ற அங்கத்தினர்கள், தேவகோட்டை லேடி டாக்டர் எம். மாதவியம்மாள், பி. ருக்மணியம்மாள், ராம. அருணாசலம், சூலூர் சுயமரியாதைச்சங்கத்தினர்கள் மு. மரகதவல்லி—முருகப்பா, நாகர்கோவில் தமிழன் பப்ளிசர் எஸ். சுப்பையா, ஈரோடு பிரசண்டமாருதம் ஆசிரியர் அன்னபூரணி-ரத்தினசபாபதி, லெட்சுமிபுரம் ந. சொ. அருணாசலம் செட்டியார், பரதூர் பி. ஜே. ஜி. ராஜன், மானா மதுரையிலிருந்து டி.வி. டேவிஸ், திருப்பூர் ஜே. மஞ்சுளாபாய், ஜானேஜிராவ், துரையூர் சு. ம. சங்க அங்கத்தினர்கள். திருப்பூர் வக்கீல் டி. ஆர். சுந்தரம் பி ஏ. பி. எல்., தூத்துக்குடி துரைமுக டிரஸ்டி கே. கே. ஏ. பெரியசாமி, செய்கோன் லாரண்ட் இப்ராகிம், புதுச்சேரி அல்பான்சே லகாஸ், திருச்செந்தூர் மு. கிருஷ்ணசர்மா, கிருஷ்ணகிரி ஜில்லா போர்டு மெம்பர் டீ. கிருஷ்ண மூர்த்தி, ராசிபுரம் மு. காவேரி ஆகியவர்களாவார்கள்.

மாலை 4-30மணிக்கு மணமக்கள் தோழர் எஸ். நீலாவதி அவர்கள் இல்லத்திலிருந்து மணம்நடைபெறுமிடத்திற்குவந்து சேர்ந்தார்கள்.மணவிழா ஆரம்பமாகியது. தோழர் வி. ராஜாம்பாள் சுயமரியாதைக்கீதம் பாடினார்.

பின்னர் தோழர் ராம சுப்பிரமணியம் மணமக்களை ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தி திருச்சி தமிழ் நாடு புரோகித மறுப்புச் சங்க சார்பாக மணமக்களுக்கு மாலை சூட்டி தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களை தலைமை வகிக்கும்படி பிரேரேபிக்க தோழர் ச. ம. சி, பரமசிவம் ஆமோதித்தார். தலைவருக்கு மாலை சூட்டப்பெற்றது. சென்னை மயிலாப்பூர் சுயமரியாதைச் சங்கத்தின் சார்பாக தோழர் அருணகிரி அவர்கள் மணமக்களுக்கு மாலை சூட்டினார்.

தலைவர் முன்னுரையாக பேசத் தொடங்கி;—

தோழர்களே! இன்று மணமகனாக வீற்றிருக்கும். எம், கே. அழகப்பா "நாட்டுக்கோட்டை செட்டிமார்" வம்சத்தைச் சேர்ந்தவர். மணமகள் பௌளும்பாள் "வேளாள" வம்சத்தைச் சார்ந்தவர். இந்த மணம் புரோகிதச் சடங்கு முதலிய அனாசார வழக்கங்களின்றி நடைபெறுகிறது. மணமக்கள் இருவரும் தாங்களே மனமொத்து மண ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வந்தது பாராட்டத்தக்கது. வைதீகர்கள் பழைய சாஸ்திரத்தை அனுசரித்து அறிவிற்கும், ஞாயத்திற்கும் பொருந்தாத முறையில் நூற்றுக்குத்தொன்னூறு கல்யாணங்களைச் செய்து விடுகின்றனர் அது கடைசியில் யாதொரு பிரயோஜனத்தையும் அளிக்காமல் கஷ்டத்தையே விளைவிக்கின்றது. யெப்படியாவது கல்யாணம் ஆனால் போதுமென்று முயர்ச்சிக்கின்றனர். தாங்களே தங்களுக்கு இஷ்டமானவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள மண மக்களுக்கு சுதந்தரம் கிடையாது. பெண் கொள்வதை சந்தையில் மாடு வாங்குவதாக நினைத்து செய்து விடுகின்றனர். பொருத்தம் பார்ப்பதில் மண மக்களுக்கு இருக்கவேண்டிய மனப்பொருத்தம் பார்க்கப்படுவதில்லை.

வழியே போகும் ஒரு பார்ப்பானையோ வள்ளுவனையோ கூப்பிட்டு பொருத்தம் பார்க்கச் சொல்லி மணத்தை நடத்தி விடுகின்றனர். மாப்பிள்ளை 7½ அடியும், பெண் 2½ அடியுமாக இருந்தாலும் பரவாயில்லை பார்ப்பான் சொல்லிவிட்டால் போதும். போன உடனேயே அறுத்துவிட்டு வந்துவிட்டால் தலைவிதியென்று சொல்லிவிடுவார்கள் பெண்களும் அவ்வாறே நினைத்துக்கொண்டு மூக்கிமுணாரி மூலையில் கிடக்கவேண்டியதுதான்.இந்த அனியாயத்தை பொருத்துக்கொண்டிருக்கக் கூடாது. கூடிய சீக்கிரம் பகுத்தறிவு பெற்று விவாக தம்பதிகளான அளகப்பா பௌளும்பாளைப் பின் பற்றி நடப்பீர்களாக என்று பேசினார்கள்.

பின்னர் மண மக்கள் இருவரும் மண ஒப்பந்த உறுதிமொழி கூறிக்கொண்டார்கள். இருவரும் மாலை மாற்றி மோதிரம் மாற்றிக்கொண்டார்கள். பின்னர் சுவாமி சிவநேசம், கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி எல். சி. டி. நாயகம் வி. ராஜாம்பாள், நகர் ரெங்கசாமி, அ. பொன்னம்பலம், சுப. விசாலாட்சி, டி. கிருஷ்ணசாமி முதலியவர்கள் பேசினார்கள். பின்னர் சென்னை எ. சுந்தரி தெலுங்கில் பேசியதை தோழர் எஸ். நீலாவதி மொழிபெயர்த்துக் கூறினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையில் பல முன்னேற்ற விஷயங்களைப் பற்றிப் பேசினதும் இரவு 8-மணிக்கு திருமணம் இனிது நிறைவேறியது. இரவு 8மணிக்கு தோழர் நீலாவதி அவர்கள் இல்லத்தில் ஒரு சமபந்தி விருந்து நடைபெற்றது.

## ராமசாமி— சீரங்கம்மாள் மாலைமாற்றுத் திருமணம்.

12-9-34ந் தேதி மாலை 4-மணிக்கு அறப்புக்கோட்டை பகுத்தறிவு நிலையத்தில் ஷை பஞ்சாயத்துபோர்டு உப தலைவர் தோழர் எஸ் எஸ். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் முத்துராமலிங்கபுரம் தோழர் ஆர்.ராமசாமி அவர்களுக்கும் தோழர் வெ. சு. ராம. சீரங்கம்மாள் அவர்களுக்கும் தாலி கட்டுதல், புரோகிதசடங்குகள் செய்தல் என்ற மூடப் பழக்கங்கள் எல்லாவற்றையும் அறவே ஒழித்து சிக்கன முறையில் மாலை மட்டுமே தம்பதிகள் மாற்றிக்கொண்டு வெகு சிறப்பாய் திருமணம் நடந்தேறியது.

உள்ளூர் வெளியூர்களில் இருந்தும் நூற்றுக்கணக்காக ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். அவ்வமயம் தோழர்களான ஜான்ரெட்டியார் சவ்வாசுபுரம், க. அ. புன்னைமுத்து கல்லூரணி, சி. சு. மு. சு. அருணாசலம் மெட்டுக்குண்டு, ராமசாமி சுக்கில நத்தம் தி. கருப்பையா, ஸ்ரீமதி ஜான் ஜெபமணி அம்மாள் ஆதியோரால் சுயமரியாதைத் திருமணம் என்னும் பொருள் பற்றி உபன்யாசம் செய்யப்பட்டது.

தலைவர் முடிவுரை கூறியதும் பகுத்தறிவு நிலையத் தலைவர் எம், நடராஜன் மலர் மாலை சூட்ட திருமணம் இனிது முடிந்தது. புகைப் படம் எடுத்த பின் வந்திருந்த எல்லோருக்கும் பகுத்தறிவு நிலையத்தார் ஓர் சமபந்திச் சிற்றுண்டி விருந்து நடத்தி தம்பதிகளை சந்தோஷமாக வழி அனுப்பினார்கள் எனப் பகுததறிவு நிலையக்காரியதரிசிவரைகிறார்.

## சரோஜனி— செல்லமுத்து திருமணம்.

13-9-34ந் தேதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு மேட்டுப்பாளையம் தோழர்ந. பிச்சைஅவர்கள் மகன்தோழர் செல்லமுத்துக்கும் வரகனேரி தோழர் பி. போர்மன்னன் அவர்கள் மகள் தோழர் சரோஜனிக்கும் திருச்சி வரகனேரி தோழர் பி. சிவபிச்சை இல்லத்தில் உறையூர் தோழர் ஆர். மருதை அவர்கள் தலைமையில் "திருமணமென்னும்" வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் நடைபெற்றது.

திருமணத்திற்கு உள்ளூரிலிருந்து

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

## விருதுநகரில்

# ஷண்முகம் வெடிகுண்டு.

## தேசபக்தி ஆச்சாரியார் வீட்டு முதலா?

## கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில்.

இந்திய சட்ட சபைத் தேர்தல் சம்பந்தமாக சர். ஆர். கே. ஷண்முகமும், தோழர்கள் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியரும் 16-9-34ந் தேதி விருதுநகருக்கு விஜயம் செய்தார்கள். வியாபாரத் தொகுதி ஓட்டர்களில் அநேகரை நேரில் சந்தித்துப் பேசினார்கள். மாலை 4-30மணிக்கு முனிசிபல் சேர்மன் தோழர் வி. வி. ராமசாமி சர். ஷண்முகத்திற்கு ஓர் சிற்றுண்டி விருந்தளித்தார். அவருடைய அழைப்புக்கிணங்கி வர்த்தகத்தொகுதி ஓட்டர்கள் பெரும்பாலோர் விஜயம் செய்திருந்தனர். சுற்றுப்பக்கங்களில் உள்ள ஓட்டர்களில் சிலரும் வந்திருந்தார்கள்.

விருந்திற்குப் பின் நடந்த பொதுக்கூட்டத்தில் ஷண்முகம் ஓர் பிரசங்கம் செய்தார். அதில் அவர் கூறியதாவது:—

இந்திய சட்ட சபைத் தேர்தல் நெருங்குகிறது. பொதுவாக சட்ட சபைப் பிரசிடெண்டுகளுக்குப் போட்டி போடுவது உலகத்தில் உள்ள நாகரிக நாடுகளில் வழக்கமில்லாமல் இருக்கிறது. ஒருவர் சட்டசபைக்குப் பிரசிடெண்டாக வந்து விட்டால் அவர் எந்தக் கட்சிக்கும் சலுகை காட்டாமல் நடு நிலைமைவகிக்க வேண்டியவராக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஸ்தானத்தில் இருப்பவருக்குத் தேர்தலில் போட்டி போட்டால், தனக்கு ஆதரவு அளிக்கும் கட்சியாருக்குச் சலுகை காட்ட நேரிட்டு விடும் என்பதை உத்தேசித்தே பிரசிடெண்டுகளுக்குப் போட்டி போடுவது வழக்கமில்லை. இங்கிலாந்தில் இதே கொள்கை அமுலில் இருந்து வருகிறது. இந்தியாவிலும் பிரசிடெண்டு படேலுக்குப் போட்டி ஏற்படாமல் இருந்தது. அதே போல் என் விஷயத்திலும் இருக்கக் கூடும் என்று எண்ணி நானும் இது வரை எவ்வித மேடைப்பிரசாரமும் செய்யவில்லை. ஆனால் நமது நாட்டில் பெரிய அரசியல் ஸ்தாபனமாகக் கருதப்படும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள், என்றும், ஓர் மகாத்மாவைத்தலைமையாகக் கொண்டவர்கள் என்றும் அகிம்சையையும், சத்தியாக்கிரகத்தையும் கொண்டவர்கள் என்றும் சொல்லப்படும் இந்த அரசியல் வாதிகள், இந்தச் சம்பிரதாயத்திலிருந்து இப்பொழுது தவறி விட்டார்கள். எந்த ஸ்தானத்திற்குப் போட்டி போடா விட்டாலும், எனக்கு உறுதியாகப் போட்டி போடுவது என்று முடிவு செய்து விட்டார்கள். அது விஷயமாய் பெரிய தலைவர்கள் என்பவர்கள் எல்லாம் மனம்போலப்பிரசாரம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பிரசாரங்களைப் பத்திரிகைகளில் பார்க்கும்போது விஷமத்தனமாகவிருக்கிறது ஆகையால் அவைகளுக்கு நான் பதில் கூற வேண்டியவனாகவிருக்கிறேன்.

### தப்பிதமான பிரசாரம்.
### வேறு தொகுதி நாடியதேன்?

அவர்கள் முதலாவது, நான் என்னுடைய வழக்கமான தொகுதியை விட்டு விட்டு புதிய தொகுதியைத் தேடுவதை முன்னிட்டு தப்பிதமான எண்ணங்களைக் கற்பித்து பரிகாசம் செய்து வருகிறார்கள். நான் சட்ட சபையில் செய்த வேலைகளை இப்பொழுது நான் வகித்து வரும் தொகுதியான கோயம்புத்தூர், சேலம் வட ஆற்காடு ஜில்லா வாசிகள் ஒப்புக்கொள்ளவில்லை என்பதற்குப் பயந்து வேறு தொகுதிக்குப் போவதாகக் கூறுகிறார்கள். முன்பு நான் மூன்று ஜில்லாக்களின் பிரதிநிதியாக மட்டும் சென்றேன். இப்பொழுது 26 ஜில்லாக்களின் எகப்பிரதிநிதியாகச் செல்ல முன் வந்திருக்கிறேன். நான் செய்துள்ள வேலைகளை அவர்களிடம் கூறி அவர்களுடைய ஆதரவினால் அங்கத்தினராக முயற்சிக்கிறேன்.

### கூறமுடியுமா?

இரண்டாவதாக ஒட்டவா ஒப்பந்தத்தைப்பற்றிமிகவும் திரித்துக்கூறிப் பிரசாரம் செய்கிறார்கள். ஒட்டவா மகாநாடு என்பது என்ன? அங்கு என்ன வேலை நடந்தது? நான் எவ்விதம் துரோகம் செய்தேன் என்பதைப் பற்றி விளக்கமாக ஒருவரும் கூறவில்லை. பிரசாரத்திற்கு வருகிறவர்களை அதைப்பற்றி விளக்கமாகக் கூறும்படி பொதுஜனங்கள் யாரும் கேட்டதாகவும் தெரியவில்லை.

நான் இந்த மேடையில் ஒரு பந்தயம் கூறுகிறேன். ஒட்டவா ஒப்பந்தம் எவ்வகையில் கெடுதி என்பதை புள்ளி விபரங்களுடன் தோழர் ராஜகோபாலாசாரியாவது, தோழர் சாமி வெங்கடாசலமாவது, அல்லது வேறு எந்தக் காங்கிரஸ் வாதியாவது கூற முடியுமா?

நான் ஓர் பிரபல காங்கிரஸ் நண்பரை நேரில் சந்தித்தேன், அவர் ஒட்டாவா ஒப்பந்தத்தை மிகவும் கண்டித்து வருபவர். அவரிடம் தாங்கள் ஒட்டவா நிபந்தனைகள் அடங்கிய புஸ்தகத்தைப் படித்திருக்கிறார்களா, அது எவ்விதமான காகிதத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டேன். அதற்கு அவர் இவைகளை எல்லாம் படித்து என் அபிப்பிராயத்தில் மாறுதல் ஏற்பட சந்தர்ப்பம் அளிக்க இஷ்டப்படவில்லை என்று கூறி விட்டார். இவ்வாறு விஷயங்களைப்படித்து உணர ஆசையில்லாதவர்கள் தான் ஒட்டவா ஒப்பந்தத்தைக் குறைகூறிப்பேசுகிறார்கள்.

### சென்ற காரணம்.

ஒட்டவா என்பது கானடா தேசத்தின் தலைநகர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள்பட்ட — நாடுகளின் வியாபார மந்தத்தை நீக்குவதற்காக வேண்டி கானடா கவர்ன்மெண்டார்களின் அழைப்பிற்கிணங்க 1931வது வருஷத்தில் ஒட்டவாவில் ஒரு மகாநாடு நடைபெற்றது. அந்த மகாநாட்டிற்கு இந்தியா கவர்ன்மெண்டு சார்பில் நான் அனுப்பப்பட்டேன். நான் 1924ல் இந்திய சட்ட சபைக்குப் போனது முதல் வியாபார விஷயமாகவும், பொருளாதார சம்பந்தமாகவும் மற்றவர்களை விட, அதிக ஜாக்கிரதையாகப் படித்துவந்தபடியாலும், நான் ஓர் வியாபாரியாக இருக்கிறபடியாலும் நான் அனுப்பப்பட்டேன் என்று கருதுகிறேன்.

### ஒப்பந்த பலன்.

நம்முடைய நாட்டிலிருந்து வருஷம் ஒன்றுக்கு சுமார் 300 கோடி ரூபாய் பெறுமான சரக்குகள் வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதில் நூற்றுக்கு இருபத்தைந்து விகிதம் இங்கிலாந்துக்குச் செல்லுகிறது. அதேமாதிரி இறக்குமதி வியாபாரத்திலும் மற்ற நாடுகளைவிட இங்கிலாந்திலிருந்துதான் நாம் அதிக வீதாசாரப்படி இறக்குமதி செய்கிறோம். நாம் தனிப்பட்ட முறையில் பெரிய வியாபாரிகளுடன் நேசப்பான்மையாக இருக்க விரும்புகிறோம். அதுபோல் நம்முடைய வியாபார சம்பந்தத்தை முன்னிட்டு, இந்த ஒட்டவா மகாநாட்டில் சில ஒப்பந்தங்களை நிர்ணயம் செய்தோம். அது தான் ஒட்டவா ஒப்பந்தம் என்று சொல்லப்படுகிறது. இதன் மூலமாக இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளுக்கு தீர்வை விதிக்கப்படாது. ஆனால் இதே சரக்குகள் வேறு தேசங்களிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அவைகளுக்கு நூற்றுக்கு 50 விகிதம் இங்கிலாந்து வரிவிதிக்க வேண்டும். உதாரணமாக இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப்போகும் அரிசிக்குத் தீர்வை கிடையாது. ஆனால் சயாம் முதலிய பிரதேசங்களிலிருந்து ஏற்றுமதி செய்தால் நூற்றுக்கு 50 விகிதம் தீர்வை விதிக்கப்படும், இதே மாதிரி மணிலாக்கொட்டை, ஆளிவிதை, பருத்தி, காப்பி புகையிலை, கோதுமை, தோல் முதலிய சாமான்களுக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்குப்பிரதிப் பிரயோஜனமாக இங்கிலாந்திலிருந்து நம் நாட்டில் இறக்குமதியாகும் சரக்குகளுக்கு, மற்ற நாடுகளிலிருந்து வருபவைகளை விட நூற்றுக்குப் பத்து விகிதம் கம்மியாக வரி விதிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். நாம் ஏற்றுமதி செய்யும் சரக்குகளுக்கு வரி இல்லையானாலும், இறக்குமதிச் சரக்குகளுக்கு வரி விதித்திருக்கிறோம் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

### வியாபாரிகள் சம்மதம்.

இந்த ஒப்பந்தத்திற்கு கவர்ன்மெண்டின் பிரதிநிதியாக நாம் மட்டும் கையெழுத்திட்டால் போதாது என்றுகருதி, நமது தேசத்தின்பிரதிநிதிகளடங்கிய இந்திய சட்ட சபையிலும் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டு அவர்களும் ஒப்பந்தத்தை பரிசீலனை செய்து அங்கீகரித்து விட்டார்கள். இந்தக்கமிட்டியின் முன்னிலையில் பெரிய வியாபாரிகள் எல்லாம்பரிசீலனை செய்யச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. வியாபார நிபுணர்கள் எல்லாம் ஒப்புக் கொள்ளும் போது வியாபாரத்தில் கொஞ்சமும் அனுபவம் இல்லாத ராஜகோபாலாச்சாரி போன்றவர்கள் அதற்கு மாறான அபிப்பிராயம் கூறத் தகுதியுடையவர்கள் அல்ல. இந்த வியாபார ஒப்பந்தம் இரண்டு கட்சிக்காரர்கள் யாருக்காவது பிடிக்கா விட்டால் 6மாத நோட்டீஸ் கொடுத்து ரத்து செய்து கொள்ளலாம் என்ற பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### தேச பக்தி.
### ஆச்சாரியார் வீட்டுமுதலா?

ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பிறகு இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் உள்ள வியாபார நிலைமை என்ன என்பதைப்பற்றி சர்க்கார் வருடத்திற்கு ஒரு முறை ஓர் அறிக்கை தயாரிக்க வேண்டும். அதில் அரசாங்கத்தார் தங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தாமல் வியாபார சம்பந்தமான புள்ளி விபரங்களை மட்டும் தெரிவிக்க வேண்டும். அவ்வித முதலாவது அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்பெரும் பாலோர் ஆதரித்திருக்கிறார்கள். இதை ஆதரித்தவர்களுக்கு எல்லாம் தேசபக்தி இல்லையா? தேசபக்தி என்பது ராஜகோபாலாச்சாரியாரின் வீட்டுமுதலா என்று கேட்கிறேன்.

### ஆசிரியர் கருத்து.

இந்த அறிக்கை வெளிவந்த பிறகு சென்னை லாயலாகாலேஜ் பொருளாதார ஆசிரியர் தோழர் பேசினைக், ஒப்பந்தத்தைப்பற்றி 'இந்து'வில் ஓர்

தொடர்ச்சி 14ம் பக்கம்பார்க்க

## நான்.

நான் காங்கிரசில் சேர்ந்துவிடப் போகிறேன் என்பதாக பலர் எனக்குப் பரிகாசக்கடிதங்களும், சில துர் எண்ணங்கள் கற்பிக்கிற கடிதங்களும் எழுதி வருகிறார்கள். நான் காங்கிரசில் சேருவதாக வைத்துக்கொண்டு பார்த்தாலும், காங்கிரசுக்கு மகத்தான செல்வாக்கும், பெருமையும் இருக்கின்ற காலத்தில் நான் அதில் சேருவதானால் எனக்கு உள் எண்ணம் ஏதாவது கற்பித்தால் அதற்கு அர்த்தமுண்டு.

இன்று அப்படி ஒன்றும் இல்லை. அதுஎப்படி இருக்கின்றது என்றால் ஜஸ்டிஸ் கட்சியானது 1926ம் ௵ முடிவில் எப்படி கடைசி மூச்சு வாங்கும் நிலையில் ஜீவநாடிகள் எல்லாம் விழுந்துபோய் எடுத்துப் புதைப்பதற்கும் ஆளில்லாத ஸ்திதியில் இருந்ததோ, அந்த நிலையில் அதைவிட மோசமான நிலையில் கொள்கையற்று, தலைவர்களற்று, மானமற்று, நாணயமற்று, அழுவாரற்று சாகும் தருவாயில் இருக்கும் காங்கிரசில் நான் போய் சேருவதாய் இருந்தால் அதில் எனக்கு என்ன லாபம் அல்லது உள் எண்ணம் இருக்கமுடியும் என்று எனது தோழர்களைக் கேட்கின்றேன்.

ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கும் போதுகூட எனக்குப் பலவித துர் எண்ணம் கற்பித்தார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி உச்சஸ்தானத்தில் சுயமரியாதையோடு உயர் நிலையில் வாழ்ந்த காலத்திலும் அதன் தலைவர்களும் அரசாங்க (கேப்நிட்) மெம்பர்கள் முதல் மந்திரிகள் வரை என்னிடத்தில் "மரியாதையும், பக்தியும்" இருப்பதாய் காட்டிக்கொண்டிருந்த காலத்திலும் கூட அக்கக்ஷியால் ஒரு காதொடிந்த ஊசி கூட நான் எனது சொந்தத்திற்கு எதிர் பார்க்கவில்லை. பெறவும் இல்லை. அதனால் நான் எவ்வித பெருமையும் அடைந்துவிடவுமில்லை என்பது எனது எதிரிகளுக்கும் தெரியும் என்று நினைத்திருக்கிறேன். (டாக்டர் சுப்பராயன் அவர்கள் காலத்திலாவது வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ விஷயமாயும் தீண்டாமை விஷயமாயும் சில காரியங்கள் சாதித்துக் கொள்ள முடிந்தது என்னலாம்) மேலும் நான் என் சொந்த முறையில் அவர்களுக்காக பட்ட கஷ்டமும், நஷ்டமும் எனது நண்பர்களுக்குத்தெரியும் என்றும் நினைக்கிறேன்.

அப்படி இருக்க காங்கிரசில், அதுவும் உயிருக்கு மாத்திரமல்லாமல் அது செத்தால் சுடுவதற்கும் இடமில்லாமல் மயானத்துக்கும் ஊசலாடும் இக்காலத்தில் காங்கிரசினிடமிருந்து நான் என்ன எதிர் பார்த்துக் கொண்டு அதனிடம் நேசம் கொள்ள முடியும் என்பது எனக்கே விளங்கவில்லை. மனித சமூக நன்மையை அதிலும் தாழ்த்தப்பட்ட, ஏழ்மைப்பட்ட பாமரமக்களின் நன்மைக்காக காங்கிரசுமாத்திரமல்ல, இன்னும் எக்கட்சியின் நேசம் கொண்டாலும் கொள்வேனே ஒழிய மற்ற படி எனது ஜீவனோபாயத்துக்கோ வாழ்க்கை உபாயத்துக்கோ எக்கட்சியிலும் சேரமாட்டேன் என்றும், சேரவேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈ. வெ. ரா.

## விஷமத்துக்கு விஷமமா? அல்லது உண்மையா?

திருச்சி "நகர தூதன்" பத்திரிக்கையில் தோழர் அவனாசிலிங்கம்நிற்கவில்லைஎன்கின்றதலைப்பின் கீழ் 'கோயமுத்தூர், சேலம், வடாற்காடு ஜில்லாக்களின் இந்திய சட்டசபைத் தொகுதிக்கு காங்கிரஸ்சார்பாக அபேட்சகராய் நிறுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் கடைசிவரை அபேக்ஷகராக நிற்கமாட்டாராம். காங்கிரசின் பெயரால் தோழர் அவனாசிலிங்கம் செட்டியாரை முன் நிறுத்தி அத்தொகுதியைப் பண்படுத்தி முடிந்ததும், கடைசியில் இருக்கக் கூடிய நிலைமையை அனுசரித்து இறுதியாகத் தோழர் இராஜகோபாலாச்சாரியாரே அதில் அபேட்சகராக நின்றுவிட ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு விட்டதாக நம்பத்தகுந்த இடத்திலிருந்து தெரியவருகிறது"

என்று ஒரு சிறு குறிப்புக்காணப்படுகிறது.

"பொய்க்குப் பொய், கோளுக்குக் கோள்; விஷமத்துக்கு விஷமம் செய்யத்தகுதி உள்ளவனுக்குத்தான் உலகில் இடமுண்டு" என்கின்ற ஒரு ஆப்த வாக்கியம் உண்டு.

நகரதூதனில் காணப்படும் இந்தக் குறிப்பானது நகர தூதனுக்கு நம்பத்தகுந்த இடத்திலிருந்து வந்திருந்தாலும் இருக்கலாம் என்றாலும் அந்த நம்பத்தகுந்த இடத்துக்கு, நம்பத்தகுந்த இடத்திலிருந்து வந்தது உண்மையாயிருக்குமா அல்லது மேல் கண்ட ஆப்த வாக்கியத்தை ஒட்டியதாக இருக்குமா என்பதை உறுதிகூற நம்மால் முடியவில்லை.

ஆகவே தோழர் அவனாசிலிங்கம் அவர்கள் நிற்கப்போவதில்லை என்பது உண்மையாயிருந்தாலும் இருக்கலாம், அல்லது பொய்க்குப் பொய், கோளுக்குக் கோள், விஷமத்துக்கு விஷமம்" என்கின்ற மனுதர்ம சாஸ்திரத்தை அனுசரித்து இருந்தாலும் இருக்கலாம் என்று எண்ணுகிறோம்.

## ஈரோடு முனிசிபல் தேர்தல்.

### 14 பேர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### ஒன்பது வார்டில் போட்டி.

ஈரோடு முனிசிபல் கௌன்சிலர் தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கபட்டார்கள். அவர்கள் பெயர்கள் வருமாறு:—

தோழர்கள்.

காண்சாகிப் ஷேக்தாவுத் சாயபு
S. R கண்ணம்மாள்
ஈ. வெ. இராமசாமி
M. சிக்கைய நாயக்கர்
பழனியப்பக்கவுண்டர்
ரங்கசாமி பிள்ளை
வீரபத்திர செட்டியார்
மாரிமுத்து பண்டாரம்
கஸ்தூரிரங்கையங்கார்
E. V. நஞ்சப்ப செட்டியார்
K. ருத்ரத்துல்லாசாய்பு
S.V.S. ராமலிங்கமுதலியார்
ஆஜிவதூத் சாயபு
E.O.C. முத்துசாமிக்கவுண்டர்

கீழ்க்கண்டவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டார்கள்.

தோழர்கள்

K. அப்துல் ரஜாக் சாயபு
M. அப்பைய கவுண்டர்
Dr M. கிருஷ்ணசாமி
K. அப்துல் ராஜாக் சாயபு
E. K. சாமியப்பன்
A. மஸ்தான் சாயபு
ஈ. வெ. கிருஷ்ணசாமி
E. P. வெங்கிடாசலம்பிள்ளை
T. அங்கமுத்துப் பிள்ளை
S. K. ஷேக்தாவுத்
J. B. மகமது சுல்தான சாயபு
சையத் அகம்மது சாயபு
A. K. மாரிமுத்து பிள்ளை

கீழ்க்கண்ட ஒன்பது வார்டுகளில் கீழ்க்கண்ட தோழர்கள் போட்டியாக நிற்கிறார்கள்.

தோழர்கள்

4-வது வார்ட்.
K. அப்துல் ரஜாக் சாயபு
E. S. கோவிந்தசாமி நாயுடு

5-வது வார்ட்.
S. K. S. காதர் சாயபு
K. அப்துல் சத்தார் சாயபு

6-வது வார்ட்.
B. ராமநாதன் செட்டியார்
C. ரங்கராஜு செட்டியார்.

11-வது வார்ட்.
M. சௌடப்பக்கவுண்டர்
V. வெங்கிடசாமி நாயுடு

12.வது வார்ட்
R. பாபு நாயுடு
E. Y. சுல்தான் சாயபு
ரூபிண்டிக்காஸ்ட்டர்
G. அற்புதசாமிபிள்ளை

14-வது வார்ட்
கோ. ராமசாமிகவுண்டர்
C. P. சின்னசாமிக்கவுண்டர்.
பழனிசாமிக்கவுண்டர்

18-வது வார்ட்.
கேசவலால் காளிதாஸ் சேட்
V.V. C R. முருகேசமுதலியார்

19-வது வார்ட்.
S. குமாரசாமிக்கவுண்டர்,
M. K. முகமது சுல்தான்சாயபு
சையத் அகமது சாயபு

27-9-34ல் தேர்தல் நடைபெறும். சில வார்டுகளில் போட்டி பலமாக இருக்கிறது.

## கோவை ஜில்லா போர்டு பிரிவினை.

15-9-34ந்தேதி நடைபெற்ற கோவை ஜில்லாபோர்டு கூட்டத்தில் கோவை ஜில்லா போர்டைஇரண்டாகப்பிரிக்க வேண்டுமென்று பெரும்பான்மையான அங்கத்தினர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். இதை இரண்டொரு அங்கத்தினர்கள் எதிர்த்தார்கள்.

பின் திவான் பகதூர் சி. எஸ். ரத்தின சபாபதி முதலியார் அவர்கள் ஜில்லா போர்டை பிரிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்து அதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிப் பேசி இதற்கு மெஜாரிட்டி இருக்கின்றதாகவும் எல்லா அங்கத்தினர்களும் ஒற்றுமையுடனும் ஏகமனதாகவும் தீர்மானிக்க வேண்டுமென்றும், அதற்காக இத்தீர்மானத்தை அடுத்த கூட்டத்திற்கு ஒத்தி வைத்துக்கொள்ளலாமென்றும் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொண்டார். அவர் அபிப்பிராயத்தை யாவரும் ஒப்புக்கொண்டுஅடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைத்தனர்.

# சென்னை (S. I. L. F.) பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் அனுப்பியிருக்கும் தீர்மானங்கள்.

இம்மாதக் கடைசியில் சென்னையில் நடக்கும் தென்னிந்திய நலவுரிமைச்சங்க மகாநாட்டிற்கு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் குறைந்த பட்ச வேலைத் திட்டம் எனக்கருதிக் கொண்டு ஒரு வேலைத் திட்டத்தை அம்மகாநாட்டு வரவேற்புக் கமிட்டிக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பியிருக்கிறார்.

அது முதலாவது விஷயாலோசனைக் கமிட்டிக்கு வைக்கப்படுமா என்னும் விஷயத்திலேயே தைரியம் கொள்ளுவதற்கில்லை என்றால் இந்நிலையில் அது அக்கூட்டத்தாரால் ஒப்புக்கொள்ளப்படுமா என்னும் விஷயத்தில் என்ன அபிப்பிராயம் கொள்ளவேண்டியிருக்கும் என்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை.

அக்கட்சிக்குத் தலைவரான பொப்பிலி ராஜா அவர்கள் ஒரு பெரிய ஜமீன்தார், ராஜ குமாரர், மிக்க செல்வவந்தர் என்றாலும் கூட அவரைப் பொருத்தவரையில் அவ்வேலைத்திட்ட விஷயத்தில் பெருத்த ஆக்ஷேபனை இருப்பதாகச் சொல்ல முடியாது. அவரது மனப்பான்மை சமதர்மத்தைத் தழுவினதேயாகும். ஆனால் அவரது பழக்க வழக்கம், பிரபுத்தன்மையில் ஈடுபட்டு வந்திருப்பதால் திடீரென்று பெருத்த மாறுதலை எதிர்பார்க்க முடியாது என்றாலும் அவரது வாழ்வு சமதர்மத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. அவர் இக்கட்சியால் எவ்வித லாபமும் அடைய ஆசைப்படவில்லை. கட்சிக்காக இதுவரையில் பெருத்த நஷ்டத்தையும், பல அசௌகரியங்களையும் அடைந்திருக்கிறார்.

ஆற்றில் அடித்துக்கொண்டு போகிறவனுக்கு மரக்கிளை அகப்பட்டதுபோல் அக்கட்சி ஒழிந்து போகும் சமயத்தில் பொப்பிலி ராஜா அவர்கள் அக்கட்சிக்குக் கிடைத்தார் என்றுதான் சொல்லவேண்டும். அக்கட்சியின் மற்ற பிரமுகர்கள் இத்தீர்மானங்களைக் கேட்டதும், பார்த்ததும் காதையும், கண்ணையும் பொத்திக்கொள்ளுவார்களோ என்று பயப்படுகின்றோம். ஆனாலும் நமது கடமையைச்செய்து பார்த்துவிடவேண்டும் என்கின்ற தன்மையில் அனுப்பியிருக்கிறோம்.

ஆனால் மற்றபடி பார்ப்பனரல்லாதாருக்காக என்று உழைத்து வந்து பல கஷ்டங்களையும், நஷ்டங்களையும் அடைந்து வந்திருக்கும் அக்கட்சியில் உள்ள தியாகிகள் பலர் இத்தீர்மானத்துக்கு ஆதரவளிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பொது மக்களில் பெரும்பான்மையோர் இத்தீர்மானத்துக்கு ஆதரவாயிருந்தாலும் கட்சிப் பிரமுகர்களின் "ஆத்ம" பலத்தின்முன் இந்த ஆதரவு எந்நிலை அடையுமோ தெரியாது. ஆகையால் பொறுத்திருந்துபார்ப்போம்.

# வேலைத்திட்டமாவது.

1. அரசாங்க உத்தியோக சம்பளங்கள் மக்களின் பரிசுத்த தன்மையைக் கெடுக்கக் கூடியதாகவும், பேராசையை உண்டாக்கக் கூடியதாகவும், இந்தியப் பொருளாதார நிலைமைக்கு மிகமிக தாங்க முடியாததாகவும் இருப்பதால் அவைகளைக் குறைத்து உத்தியோகஸ்தர்களுடைய வாழ்க்கையின் அவசிய அளவுக்கு ஏற்றதாகவும், மீத்துப் பெருக்கி வைப்பதற்கு லாயக்கில்லாததாகவும் இருக்கும்படி செய்யவேண்டும்.

2. பொதுஜன தேவைக்கும், சௌகரியத்துக்கும் நன்மைக்கும் அவசியமென்று உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் தொழில்சாலைகள், இயந்திரசாலைகள் போக்கு வரவு சாதனங்கள் முதலியவை அரசாங்கத்தாராலேயே நடைபெறும்படி செய்யவேண்டும்.

3. ஆகார சாமான்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், அவற்றை வாங்கி உபயோகிக்கும் பொதுஜனங்களுக்கும் மத்தியில் தரகர்கள், லேவாதேவிக்காரர்கள் இல்லாதபடி கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் கஷ்டத்தையும் சாமான் வாங்குபவர்களின் நஷ்டத்தையும் ஒழிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

4. விவசாயிகளுக்கு இன்று உள்ள கடன்களை ஏதாவது ஒரு வழியில் தீர்ப்பதுடன் இனிமேல் அவர்களுக்குக்கடன் தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும்படியும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

5. குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் குறிப்பிட்ட ஒரு அளவு கல்வியாவது எல்லா மக்களுக்கும் ஏற்படும்படியாகவும், ஒரு அளவுக்காவது மதுபானத்தின் கெடுதி ஒழியும்படியாகவும், ஒரு அளவுக்கு உத்தியோகங்கள் எல்லா ஜாதி மதக்காரர்களுக்கும், சரிசமமாய் இருக்கும்படிக்கும் உடனே ஏற்பாடுகள் செய்வதுடன் இவை நடந்து வருகின்றதா என்பதையும் அடிக்கடி கவனித்து தக்கது செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

6. மதங்கள் என்பவைகள் எல்லாம் அவரவர்களுடைய தனி எண்ணமாகவும், தனி ஸ்தாபனங்களாகவுமே இருக்கும்படி செய்வதுடன் அரசியலில்—அரசியல்நிர்வாகத்தில் அவை எவ்வித சம்மந்தமும், குறிப்பும் பெறாமல் இருக்கவேண்டும். ஜாதிக்கென்றோ மதத்திற்கென்றோ எவ்வித சலுகையோ உயர்வு தாழ்வு அந்தஸ்தோ அவற்றிற்காக அரசாங்கத்திலிருந்து தனிப்பட்ட முறைகளைக் கையாடுவதோ ஏதாவது பொருள் செலவிடுவதோ ஆகியவை கண்டிப்பாய் இருக்கக்கூடாது.

7. கூடிய வரை ஒரு குறிப்பிட்ட ரொக்க வரும்படிக்காரருக்கோ, அல்லது தானே விவசாயம் செய்யும் விவசாயிக்கோ வரிப்பளுவே இல்லாமலும் மனித வாழ்க்கைக்குச் சராசரி தேவையான அளவுக்கு மேல் வரும்படி உள்ளவர்களுக்கும், அன்னியரால் விவசாயம் செய்யப்படுவதன் மூலம் பயனடைபவர்களுக்கும் வருமானவரி முறைபோல் நிலவரி விகிதங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

8. லோக்கல் போர்டு, முனிசிபாலிட்டி, கோவாபிரேட்டிவ் இலாகா ஆகியவைகளுக்கு இன்னமும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இவற்றின் மூலம் மேலே குறிப்பிட்ட பல காரியங்கள் நிர்வாகம் செய்ய வசதிகள் செய்து தக்க பொருப்பும், நாணயமும் உள்ள சம்பள அதிகாரிகளைக் கொண்டு அவைகளை நிர்வாகம் செய்யச் செய்ய வேண்டும்.

9. விவகாரங்களையும், சட்ட சிக்கல்களையும் குறைப்பதுடன் சாவுவரி விதிக்கப்படவேண்டும்.

10. மேலேகண்ட இந்தக்காரியங்கள் நடைபெறச் செய்வதில் நாமே சட்டங்கள் செய்து அச்சட்டங்களினால் அமுலில் கொண்டுவரக் கூடியவைகளை சட்ட சபைகள் மூலமும், அந்தப்படி சட்டங்கள் செய்துகொள்ள அதிகாரங்கள் இல்லாதவைகளை கிளர்ச்சி செய்து அதிகாரங்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

# பகுத்தறிவு.

ஈரோடு 1934-செப்டம்பர் 23-உ

## காங்கிரசை விட்டு காந்தியார் விலகுகிறாராம்.

வழ வழா அறிக்கை.

தோழர் காந்தி அவர்கள் "காங்கிரசை விட்டு நான் விலகப்போவதாக ஏற்பட்ட செய்தி உண்மைதான்" என்ற தலைப்பில் ஒரு நீண்ட அறிக்கை விடுத்திருக்கிறார்.

அதில் அவர் "என் இஷ்டப்படி காங்கிரசுக்காரர்கள் நடக்கவில்லை.

காங்கிரஸ்காரர்கள் பலரிடத்தில் நாணயமில்லை.

என்கொள்கையில் நம்பிக்கையில்லாமலே பல முக்கிய காங்கிரஸ் வாதிகள் என்னைப் பின்பற்றுவதாய் நடித்திருக்கிறார்கள்.

மற்றும் பலர் அஹிம்சையிலும், சத்தியத்திலும் நம்பிக்கையில்லாமல் அது இருப்பது போல வேஷம் போடுகிறார்கள்.

அஹிம்சையையும், சத்தியத்தையும் தற்சமயத்துக்கு ஒரு வேலைத் திட்டமாய்க் கொண்டிருக்கிறார்களே தவிர அவர்களுக்கு அவை ஒரு வாழ்க்கைச்சாதனமாக இல்லை.

கதரில் நம்பிக்கை இல்லாதவர்கள் கதரைக் கட்டிக்கொண்டு ஏமாற்றுகிறார்கள். சிலர் சமயத்துக்குக் கட்டிக்கொள்ளுகிறார்களே தவிர உண்மையில் கட்டுவதில்லை.

என்னை உபயோகித்துக்கொள்ளுகிறதற்காகவே என்னிடம் பக்தி விசுவாசம் காட்டுகிறார்கள்."

என்றெல்லாம் குறிப்புக்காட்டிவிட்டு 'நான் சில தீர்மானங்களை வரப்போகும் காங்கிரசில் பிரேரேபித்துவிட்டு அவை ஒப்புக்கொள்ளப்படவில்லையானால் காட்டுக்குப்போய் விடுவேன்" என்று சொல்லி அவ்வறிக்கையை முடித்திருக்கிறார்.

அத்தீர்மானங்களோ பழையதீர்மானங்களே அல்லாமல் புதியது ஒன்றும் இல்லை. அதாவது:—

1. "சுயராஜ்யம் பெற சட்டரீதியானதும், சமாதானமானதுமான வழியில் உழைக்க வேண்டும்" என்கின்ற வார்த்தைகளை மாற்றி "சத்தியமும், அஹிம்சையுமான வழியில் உழைக்கவேண்டும்" என்கின்ற வார்த்தையைப் புகுத்தவேண்டும்.

2. காங்கிரசுக்குச் சந்தாவாக ஒவ்வொருவரும் 4 அணாவுக்குப் பதிலாக தாமே நூற்ற 8000 அடி நூல் செலுத்த வேண்டும்.

3. 6 மாதகாலம் காங்கிரஸ் அங்கத்தினராய் இருந்தவருக்கே ஓட்டுரிமை உண்டு.

4 காங்கிரசுக்கு பிரதிநிதிகள் 1000 பேர்கள் தான் இருக்க வேண்டும்" என்பவைகளாகும்.

இவைகளில் புதிய கொள்கைகளோ, புதிய நோக்கமோ ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அஹிம்சை, சத்தியம் என்பது மோக்ஷ நரகம் என்பது போன்ற ஒரு கற்பனைச் சொல்லே தவிர விளக்கமான அர்த்தம் உள்ள மூலச்சொல் அல்லவென்பதே நமது அபிப்பிராயம்.

உலகில் மனிதன் நிலைமைக்குத் தக்கபடி தன்னைச்சரிப்படுத்திக்கொள்வதுதான் இயற்கையே தவிர இஷ்டத்துக்கும் சௌகரியத்துக்கும் விரோதமாக நிர்ப்பந்தத்தில் வாழ்வது இயற்கையல்ல.

இவ்வார்த்தைகள் கற்பு, ஒழுக்கம் என்னும் வார்த்தைகளால் வலுத்தவன், இளைத்தவனை ஏமாற்றி அடிமைப் படுத்தி அடக்கி ஆள்வது போல் அஹிம்சை சத்தியம் என்னும் பூச்சாண்டிகளைக் காட்டி பாமர மக்களை ஏமாற்றி அடக்கி ஆளும் சூட்சியேயாகும்.

சத்தியத்தைப் பேசவேண்டுமானால் அஹிம்சையோடு வாழவேண்டுமானால் மார்க்ஸால், லெனினால் சிருஷ்டிக்கப்பட்ட உலக மக்களுக்கு ஒரு சமயம் சாத்தியமாய் இருக்கலாம் மற்றபடி "கடவுளாலோ" காந்தியத்தாலோ உண்டாக்கப்பட்ட உலகுக்கு சத்தியம், அஹிம்சை என்பது ஹம்பக்கே தவிர அந்த வார்த்தைகளிலும் பிரயோகத்திலும் கூட சத்தியம், அஹிம்சை என்பனவற்றின் வாடையே இல்லை யென்று தூக்கு மேடையில் இருந்து கூடச்சொல்ல முடியும்.

கோவில் பிரவேசம் என்று கூப்பாடு போடுவது ஒரு எட்டில். மறு எட்டில் இப்போது தேசம் தயாராய் இல்லை. பெரும்பான்மை ஜனங்கள் அதற்கு அனுகூலமாயில்லை ஆதலால் அதை நழுவ விட்டு விட வேண்டும் என்பது மறு எட்டில் என்றால் சத்தியம் எங்கே இருக்கிறது.

மகாராஜாக்கள் அப்படியே இருக்க வேண்டும், ஏழைகள் செருப்புத்தைக்கவேண்டும், மாடுமேய்க்கவேண்டும், கல்லுடைக்க வேண்டும், கதர் நூற்க வேண்டும் என்றால் சத்தியம் அஹிம்சை எங்கே இருக்கிறது? எப்படி இருந்தாலும் இந்தப் பிரேரேபணை காங்கிரசில் நிறைவேறித்தான் தீரும். ஏனென்றால் எவ்வளவு "அயோக்கியனும் சத்தியம் கூடாது அஹிம்சை கூடாது" என்று சொல்ல ஒருபோதும் முன்வரமாட்டான்

இத் தீர்மானம் நிறைவேறிவிட்டால் சட்டரீதியும், அமைதியும் என்கின்ற வார்த்தைகள் என்ன கதியாவது என்பது நமக்கு விளங்கவில்லை.

சட்டரீதி அல்லாத—அமைதியல்லாத காரியங்கள் சத்தியமானதாகவும், அஹிம்சையானதாகவும் இருந்தால் எதையும் செய்யலாமா என்று கேட்கின்றோம்.

இத் தீர்மானம் நிறைவேறிவிட்டதாகவே வைத்துக்கொள்ளுவோம். அப்போது அதற்கு அனுகூலமாய் ஓட்டுக் கொடுத்தவர்கள் எல்லாம் தோழர் சத்திய மூர்த்தி உட்பட சத்தியமாகவும், அஹிம்சையாகவும் நடப்பார்கள் என்று தோழர் காந்தியார் நம்பிக்கொண்டு தான் மறுபடியும் காங்கிரசில் இருக்கப் போகிறாரா? என்று கேட்கின்றோம்.

இதுவரை நிறைவேறின அனேக தீர்மானங்கள் விஷயத்தில் முக்கிய காங்கிரஸ் வாதிகளும், மேன்மையான காங்கிரஸ் வாதிகளுமே கட்டுப்பட்டு உண்மையாய், நாணயமாய் நடக்க வில்லை என்று காந்தியாரே ஒப்புக்கொள்ளும் போது இந்த தீர்மானங்கள் விஷயத்தில் மாத்திரம் இனிமேல் அவரது சிஷ்யர்களும், ஆதரவாளர்களும், மற்றும் "10 லக்ஷம்" காங்கிரஸ் மெம்பர்களும் உண்மையாய் நடந்து கொள்வார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கிறோம்.

இனிமேல் பொய்ச் சத்தியம் செய்வதில்லை என்று ஒருவன் புதுச் சத்தியம் செய்தால் இது பழைய சத்தியத்தில் சேர்ந்தது அல்ல என்பதற்கு என்ன பரீக்ஷை என்றும் கேட்கின்றோம்

நாட்டில் காங்கிரசுக்கு மரியாதை போய், காங்கிரசின் நாணயத்தில் ஜனங்களுக்கு சிறிதும் நம்பிக்கையற்று, காங்கிரசுக்காரர்களுக்கு மதிப்பே இல்லாமல் அதன் கொள்கைகளும், போக்கும் சிரிப்பாய்ச் சிரிக்கும் நிலை ஏற்பட்டு இருப்பதை அறிந்து ஒரு புதிய காணம் போட்டு அவற்றை மறுபடியும் நிலைநிறுத்தச் செய்யப்படும் தந்திரமே ஒழிய இதில் புதிய தத்துவமோ, அனுகூலமோ ஏதும் இருப்பதாகவோ ஏற்படப் போவதாகவோ நம்மால் நம்ப முடியவில்லை.

கதர் தீர்மானத்தை எடுத்துக்கொண்ட போதிலும் இதுவும் பழைய கருப்பனே அல்லாமல் புதுச்சங்கதி என்ன இருக்கிறது என்று கேட்கின்றோம்.

15ம் நெம்பர் நூல் 8000 அடி நீளம் தன் கையால் நூற்று மாதந்தோறும் கதர் டிப்போவுக்கு அனுப்ப வேண்டும் என்று 1924ம் வருஷத்திலேயே தீர்மானித்து இருக்கிறது ஆதலால் இப்போதும் பம்பாய் காங்கிரசில் அது நிறைவேறி விடுவதில் அதிசயமில்லை. ஆனால் கைதூக்கினவர்கள் நூற்பார்களா? இது சாத்தியமா? இதனால் நாட்டுக்கு ஏதாவது பயன் உண்டா என்பதை யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம். கோடிக்கணக்கான ரூபாய்கள் நூல் நூற்பதற்கும், கதருக்கும் பிரசாரத்தில் மாத்திரம் செலவாகி விட்டது அப்படி இருந்தும் ராட்டினம் கண்காட்சிசாலையில் மாத்திரம் பார்க்கலாம். அல்லது காட்டுமிராண்டிப் பருவமுள்ள மக்களிடத்தில் மாத்திரம் பார்க்கலாம் என்கின்ற நிலை வந்து கொண்டிருக்கின்றது. மாதம் 100, 150 ரூபாய் வீதம் கதர் இலாக்காவில் பணம் அடைகிறவர்கள் பண்டாரச் "சந்நிதியும் சங்கராச்சாரியும், விபூதி உருத்திராக்ஷம் தரித்திருப்பது போல் தான் ராட்டினம் சுற்றவேண்

டியதாய் இருக்கிறது'' என்று சொல்லக்கூடிய நிலைக்கு நூல் நூற்கும் தன்மை வந்து விட்டதென்றால் இந்தத்தீர்மானம் பாசாங்குதான் என்ன காரியம் சாதித்து விடமுடியும் என்பது நமக்கு விளங்க வில்லை. அப்படியே எல்லோரும் நூற்பதாய் இருந்தாலும் 34 கோடி பேருக்கும் கதர் துணி வேண்டுமானால் வேலைக்கு லாயக்குள்ள இந்திய மக்கள் எல்லோரும் எப்போதுமே நூற்றாலும் முடியாது என்று தான் சொல்லுவோம்.

மற்றும் காங்கிரசில் உள்ள ஊழல்கள் காங்கிரஸ்க்காரர்களிடத்தில் உள்ள நாணயக்குறைவுகள், அவர்களது சுயநலங்கள், சூழ்ச்சிகள் வஞ்சகங்கள் ஆகிய காரியங்களை காந்தியும் இன்றுதான் அறிந்தவர் போல்குறிப்பிடுவதுநமக்கு எல்லாவற்றையும்விட ஆச்சரியமாய் இருக்கிறது. இதைப்பற்றி விவரிக்காமல்விட்டு விடுவதே நலம் என்றுகருதுகிறோம். கடைசியாக ஒன்று கேட்கின்றோம்.

அதாவது சத்தியம், அஹிம்சை, நூல்சந்தா, கதர், பிரதிநிதிகள் குறைப்பு ஆகியவைகள் பாசாங்கு அந்தப்படியே ஜனங்கள் நடக்கின்றார்கள் என்றே வைத்துக்கொண்டாலும் அதற்கு மேல் செய்கின்ற வேலை என்ன? என்பது நமக்கு விளங்க வில்லை.

தனதுசுயராஜ்யத்துக்கு தனக்கே அர்த்தம் தெரியவில்லை என்று காந்தியார் சொல்லியாகி விட்டது. மேலும் சத்தியாக்கிரகத்துக்காகவே உயிர்வாழ்வதாகவும். சத்திய சோதனைக்காகவே அரசியலில் நுழைந்ததாகவும் சொல்லுகிறார். இந்துமதமே உருவாரமாக வந்ததாகவும் அதற்காகவே மூச்சு விடுவதாகவும் சொல்லுகிறார் ஆனால் சத்தியம் எது? அசத்தியம் எது? சத்திய சோதனை என்றால் என்ன? என்பவற்றை எங்கும் விளக்கி இருப்பதாகத் தெரியவில்லை.

சுயராஜ்யத்துக்கு எப்படி விளக்கம் கூற முடியவில்லையோ அதுபோல்தான் இவைகளுக்கும்விளக்கம் கூறமுடியாதவைகளாய்போய்விட்டன. இதற்காக மக்கள் தியாகம் செய்யவேண்டும். அடிபடவேண்டும், சிறை செல்லவேண்டும், சட்டமறுப்பு செய்யவேண்டும் என்றெல்லாம் பேசினால் இவை மக்களுக்கு புரிகின்றதா என்று கேட்கின்றோம். ஆகையால் காந்தியாரின் அறிக்கையானது வழவழா கொழகொழா என்று யாருக்கும் அருத்தமாகாத முறையில் எவ்வித பிடியும் இல்லாத மாதிரியில் இருக்கின்றது என்பதோடு காங்கிரசில் இருக்கும் பழைய ஆசாமிகளுக்கும் படித்த கூட்டத்தாருக்கும் பார்ப்பனர்களுக்கும் மாத்திரம் பயனளிக்கக்கூடியதாக இருக்கின்றதே ஒழிய வேறில்லை என்பதே நமது முடிவு.

## ஷண்முகமும், ஒட்டவாவும்.

தோழர் சர். ஷண்முகம் அவர்களைப்பற்றிப் பார்ப்பனர்கள் பொறாமைப்பட்டு இந்த சுமார் இரண்டு வருஷ காலமாகச்செய்துவரும்விஷமப் பிரசாரத்திற்கு முக்கிய ஆஸ்பதமாய் கொண்டது ஒட்டவா ஒப்பந்தத்தில் தோழர் ஷண்முகம் கலந்திருந்தார் என்பதே.

இந்தஒட்டவாஒப்பந்தம்என்கின்ற ஓலமே ''கீழ்'' முதல் ''மேல்'' வரையில் தங்களது விஷமத்தனத்துக்கும், இழி பிரசாரத்துக்கும் பயன் படுத்தப்பட்டு வருகின்றது என்றாலும் அந்த ஒட்டவா ஓலம் தான் என்ன என்றுபார்ப்போம்.

இழவு வீடுகளில் துக்கத்துக்குச் சிறிதும் சம்பந்தப்படாத பெண்கள் கூலிக்கு மார்பு வீங்கும்படி மாரடித்துக்கொண்டு புரளுவது போல் ''ஒட்டவா விஷயம் என்றால் என்ன? அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?'' என்கின்ற விஷயங்களே தெரியாமல் ஒரே கூப்பாடாக கத்திக்கொண்டு ''ஒட்டவா வீரர்'' ''ஒட்டவா வீரர்'' என்று எழுதிவருகின்றனர்.

ஒருவன் ''எல்லாவகுப்பு மக்களுக்கும் சமசுதந்திரம் வேண்டுமென்று'' கேட்டால் அவனைவகுப்புவாதிஎன்பதும், ''உங்கள் சுயராஜ்யத்துக்கு அர்த்தமென்ன'' என்று கேட்டால் அவனை தேசத்துரோகி என்பதும், ஜாதித்திமிர்களைப் பற்றிபேசினால் பிராமணத்துவேஷி என்பதும், தீண்டாமைக் கொடுமையைப்பற்றிப்பேசினால் மதத்துரோகி என்பதுமஎப்படிபார்ப்பனர்களுக்கும் அவர்களது கூலிகளுக்கும் உரிமையோ, அதுபோல் ஒருவன் இந்தப்பார்ப்பனர்களுக்கும், அவர்களது கூலிகளுக்கும் புரியாத காரியத்தையோ, அல்லது இவர்களது நன்மைக்கு விரோதமான காரியத்தையோ செய்து விட்டால் அவனை ஒரேஅடியாக சர்க்கார் தாசன் என்று கூப்பாடு போடுவதும் வழக்கமாகஇருந்து வருகின்றது.

தோழர்ஷண்முகம்அவர்களை சுமார் ஒன்றரை வருஷத்துக்கு முன்பு அதாவது அவர் சட்டசபை பிரசிடெண்ட் ஆவதற்கு முன்பு ஒட்டவா விஷயமாய் தங்களை நிபுணர்கள்என்றுசொல்லிக் கொள்ளுபவர்களேபலர் கேட்ட போது ''நீங்கள் தயவு செய்து பொருளாதார விஷயமாய் A B C D கற்றுக் கொண்டுவந்து என்னிடம் பேசுங்கள்'' என்று சொன்னது யாவருக்கும் ஞாபகமிருக்கும். அவர்கள் அதற்குப் பொருளாதார பிரச்சினைப்படி யாதொரு பதிலும் சொல்லாமல் இருந்து விட்டு தட்டிப்பேச ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் என்பது போல் இப்போது மறுபடியும் ஒட்டவா ஒட்டவா என்று கூப்பாடு போடுகிறார்கள்.

பொருளாதார விஷயத்தில் ஒட்டவாவைப் பற்றி மிக பரிதாபப்படும் காங்கிரஸ் பிரசாரகர்கள், எலக்ஷன்கூலிகள், பார்ப்பன சிஷ்யர்கள், தேசியத் தலைவர்கள் என்பவர்களையெல்லாம் விட ஒரு படி அதிகமாகத் தெரிந்தவரும், அதே தொழிலில் இருந்தவரும், இப்போதும் அதே வேலையில் இருப்பவருமானதோழர் வித்தியாசாகர பாண்டியா அவர்கள் தான் இந்திய சட்டசபையில் இருப்பதைவிட தோழர் ஷண்முகம் ''ஒட்டவா வீரர்'' இருப்பது மேல் என்றும் அதிக நன்மை பயக்கும் என்றும் கருதி தான் விலகிக்கொண்டு அவருக்கு இடம் கொடுத்து விட்டார்.

வியாபார அரசர் என்று சொல்லப்படும்வியாபார நிபுணரும், கோடீஸ்வர வியாபாரியுமாகிய தோழர் ஜமால் மகம்மது சாயபு அவர்கள் தான் அந்த ஸ்தானத்தில் இருந்தும் மறுபடியும் தனக்கு அந்த ஸ்தானம் காலடியில்இருக்கக் கூடிய நிலைமை இருந்தும் தான் இருப்பதை விட தோழர்ஷண்முகம் இருப்பதே வியாபாரத்தின் நன்மைக்கும், நாட்டின்நன்மைக்கும் பயன்படும் என்று கருதி தோழர் ஷண்முகம் அவர்களுக்கு விட்டுக் கொடுத்ததுடன் அவருக்கு ஆதரவும் கொடுத்து வருகிறார்.

நாணயமாற்று, பேங்கிங், ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் ஆகிய துறைகளில் நிபுணர்களும் அதே தொழில்காரர்களும் ஆகியவர்களே தோழர் ஷண்முகத்துக்காக விட்டுக் கொடுத்து விட்டு ஆதரவும் அளித்து வருகிறார்கள் என்றால் இந்தக் கூப்பாடுபோடும் தற்குறி ஆசாமிகளுக்கு என்ன யோக்கியதை, என்ன அவசியம், என்ன ஞானம் என்பது நமக்கு விளங்கவில்லை.

இவைகள் எப்படியோ இருந்தாலும் தோழர் ஷண்முகம் அவர்கள் விருதுநகரில் இந்த ஒட்டவா கூப்பாடு வீரர்களுக்கு அளித்த பதிலை (மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருப்பதை) படித்துப் பார்க்கும்படி எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது.

''நான் வேறு தொகுதிக்கு போனதைஒருகாரணமாகவைத்து விஷமப்பிரசாரம் செய்கிறார்கள். ஆனாலும் நான் இந்த விஷமப்பிரசாரக் காரர்களுடன் பந்தயம் போடவே அதாவது நான் செய்தது சரியா? தப்பா என்பதை பாமர மக்களுக்கு மெய்ப்பித்துக்காட்டுவதற்காகவே குடியானவர்கள் தொகுதியையும், இரண்டொரு ஜில்லா மாத்திரம் சம்மந்தப்பட்டதொகுதியையும் விட்டு விட்டு ஒட்டவா ஒப்பந்தத்தின் பயனை அனுபவிக்கும் வியாபாரிகள் தொகுதிக்கும் அதாவது26 ஜில்லாக்காரரும்தெரிந்தெடுக்கவேண்டிய மாகாணத்தொகுதிக்கும் நின்று இருக்கிறேன். ஒட்டவா கூப்பாடுவீரர்கள்உண்மையானவர்களும், சக்தி உடையவர்களுமானால் ஒரு கைபார்க்கட்டும்'' என்று அறைகூவி அழைக்கிறார்.

இதற்கு இந்த வீரர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று கேட்கின்றோம். ''கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரிந்து போகும்'' என்பது போலும் ''பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்கால் கீச்சுக் கீச் சென்னும் கிளி'' என்பது போலும் ஒட்டவா கூப்பாடு வீரர்களு

க்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டதைக் காணலாம். தோழர் ஷண்முகம் அவர்கள் கோவை, சேலம், வடஆற்காடு ஜில்லாக்களிலும் கூட உள்ள வர்த்தகத்தொகுதி மெம்பர்களிடம் 100 க்கு 75 ஓட்டுகளுக்குமேலாகவே வாங்கப்போகிறேன் இதற்கும் யார் வேண்டுமானாலும் ராஜகோபாலாச்சாரியார் உள்பட பந்தயங்கட்டி பார்க்கட்டும், என்றும் கர்ஜிக்கிறார். நிற்க

மற்றொரு பந்தயம்.

"நான் இந்த மேடையில் ஒரு பந்தயம் கூறுகிறேன். ஒட்டவா ஒப்பந்தம் எந்தவகையில் இந்தியாவுக்குக் கெடுதி என்று தோழர் ராஜகோபாலாச்சாரியாராவது தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியாராவது புள்ளி விபரங்களுடன் (ஆதாரங்களுடன்) கூறமுடியுமா என்று கேட்கின்றேன்." என்று கூறுகிறார். அதோடு மாத்திரமல்லாமல் ஒட்டாவா ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்ட நன்மைகளையும், லாபத்தையும் புள்ளிவிபரத்தோடு எடுத்துக் கூறியும் இருக்கிறார்.

மற்றும் "நான் மாத்திரமல்லாமல் இந்திய சட்டசபை பிரதிநிதிகளில் வியாபார அனுபவமுள்ளவர்கள் அடங்கிய கமிட்டியும் ஒட்டவா ஒப்பந்தத்தை பரிசீலனை செய்து அதை அங்கீகரித்து இருக்கிறது" என்கின்றார். தோழர் ராஜகோபாலாச்சாரியாரும், அவர்களது சிஷ்யர்களும், கூலிகளும் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று கேட்கின்றோம்.

இந்த "நிபுணர்கள்" தோழர்கள் ஷண்முகத்தைவிட, ஜமால் மகம்மதைவிட, வித்தியாசாகர பாண்டியாவைவிட இந்திய சட்டசபையில் இதற்கென்று நிலையாக உள்ள பிரதிநிதி கமிட்டியாரை விட எவ்வளவு தூரம் வியாபார அனுபவம், பொருளாதார சாஸ்திர விற்பத்தி, லாப நஷ்டம் அடைந்த சொந்த அனுபவத் திறமை கொண்டவர்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. காங்ரஸ் தேசாபிமானம் என்னும் பெயரால் எதையும் சாதித்து விடலாம். என்கின்ற அகம்பாவத்தையும், ஆணவத்தையும் ஒரு கைபார்த்து விடவேண்டும் என்கின்ற ஆவலே நம்மை இவற்றையெல்லாம் பற்றி கவனிக்கச் சொல்லுகின்றதே ஒழிய வேறில்லை. அன்றியும் இவ்விஷயத்தில் பார்ப்பனர்கள் ஊளை இடுவதைப்பற்றி நமக்குக்கவலை யில்லை. பார்ப்பனரல்லாதார் கூடவே கோவிந்தாப் போடுவது தான் நம்மை மார்பில் குத்துவது போல் உறுத்துகின்றது.

நிற்க, பொருளாதார புரொபசர் தோழர் பேசினுக் என்பவர் பொருளாதார விஷயத்தில் பட்டம்பெற்ற நிபுணர்—உலகபொருளாதாரநிபுணர்களில் ஒருவராய் மதிக்கப்படுபவர் பிரிட்டிஷார் அல்லாதவர் மாத்திரமல்லாமல் பிரிட்டிஷார் மீது. விரோத பாவம் கொண்டுள்ள ஜர்மனி தேசத்தைச்சேர்ந்தவர். இப்படிப்பட்ட இவர் "ஒட்டாவாஒப்பந்தத்தால் இந்தியாவுக்குநன்மைஎன்பதுமாத்திரமல்லாமல் இந்திய வியாபார விருத்திக்கு ஒட்டாவா ஒப்பந்தம் அவசியமானது" என்று தக்கஆதாரங்களுடன் "இந்து" பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். இவர் வார்த்தையை நம்புகிறீர்களா அல்லது "எவ்வளவு அயோக்கியனானாலும் நாலணா கொடுத்து காங்கிரசில் சேர்ந்தவுடன் யோக்கியனாய் விடுவான்" என்று சொல்லும் வியாபார வாசனை அற்ற தோழர் ராஜகோபாலாச்சாரியாருடையவும் அவரது கோஷ்டியாரினுடையவும் வார்த்தையை ஒப்புக்கொள்ளுகிறீர்களா; என்று கேட்கிறார்.

மற்றும் அனேக புள்ளி விபரங்களைக்காட்டி ஒட்டாவா ஒப்பந்தத்தின் நன்மையை விளக்கியிருக்கிறார்.

ஆகவே வாசகர்கள் பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்ற விஷயத்தில் பார்ப்பனர்கள் எவ்வளவு சூழ்ச்சி செய்கிறார்கள்—எவ்வளவு அபாண்டங்களைக்கற்பிக்கிறார்கள்—தங்கள் மன்சாட்சிக்கு விரோதமாகவும், தங்களுக்கு சிறிதும் புலப்படாத விஷயமாகவும் மனதாரப் பொய் என்று தெரியக்கூடிய விஷயங்களையும் ஆயுதமாகக்கொண்டு எவ்வளவு மனந்துணிந்த கொலை பாதகத்துக்கு ஒப்பான கெடுதியைச்செய்கிறார்கள் என்பதையும் மற்றவர்களைக்கொண்டு செய்விக்கத் துணிகிறார்கள் என்பதையும் வாசகர்கள் உணர வேணுமாய் விரும்புகிறோம்.

---

**தயவுசெய்து**

**தோழர் ஷண்முகம் அவர்களின் விருதுநகர் பிரசங்கத்தைப் படியுங்கள்.**

---

# இந்திய சட்டசபை

மாஜி முதல் மந்திரியான டாக்டர் P. சுப்பராயன் அவர்கள் லண்டனுக்குச் சென்றிருந்தவர் வந்து விட்டார். அவரது மனைவியார் தோழர் ராதாபாய் அம்மாள் அவர்கள் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு ஒரு அபேக்ஷகராய் நிற்கப் போகும் செய்தி மறுபடியும் கிளம்பி இருக்கிறது. இதன் பயனாய்த் தமிழ் நாட்டில் இந்திய சட்டசபைத் தேர்தல் விஷயத்தில் ஒரு மாற்றம் ஏற்படலாம்.

அதாவது கோவை ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும் கொங்கு வேளாள சமூகம் அதிகமாக உண்டு. இந்த இரண்டு ஜில்லாவில் உள்ள வேளாள சமூகம் ஒரு வேளாள சமூக அபேக்ஷகரைத் தான் ஆதரிப்பார்கள். வேளாள சமூகத்தில் ஒரு அபேக்ஷகர் இல்லை என்கின்ற காரணத்தினாலேயே கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்டு தோழர் வெள்ளியங்கிரிக் கவுண்டர் தனது ஜில்லா போர்டு ஸ்தாபனத்தின் பயனாய் உள்ள செல்வாக்கைத் தோழர் அவனாசிலிங்கத்துக்காகப் பயன் படுத்துவதாகவும், கோவை ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்டும், கொங்கு வேளாள்குலத் தலைவரும், மடாதிபதியுமான பழயகோட்டைப் பட்டக்காரர் அவர்கள் தனது செல்வாக்கை டாக்டர் வரதராஜுலு அவர்களுக்குப் பயன் படுத்துவதாகவும் வாக்களித்து இருந்தார்கள். இதன் பயனாக கோவை, சேலம் ஜில்லா வேளாள சமூக ஓட்டுகள் இவ்விருவருக்குமே சற்றேக்குறைய சரிசமமாகப் பிரிந்து போகக் கூடிய நிலையில் இருந்து வந்தது.

இப்போது டாக்டர் சுப்பராயன் அவர்கள் சீமையிலிருந்து வந்து தோழர் ராதாபாய் அம்மாளின் அபேக்ஷக ஸ்தானத்தை உறுதிப் படுத்தி மேல்கண்ட இரண்டு கனவான்களையும் சென்று பார்த்ததில் தோழர் வெள்ளியங்கிரிக் கவுண்டரும், பட்டக்காரர் அவர்களும் தோழர் ராதாபாய் அவர்களை ஆதரிப்பதைப்பற்றி டாக்டர் சுப்பராயனுக்குத் தைரியம் சொல்லி விட்டதாகத்தெரிகின்றது.

இதுமாத்திரமல்லாமல் தோழர் வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்கள் தோழர்கள் அவனாசிலிங்கம் செட்டியாருக்கும், ராஜகோபாலாச்சாரியாருக்கும் இது விஷயத்தைத் தெரிவிக்கப்போவதாகவும், பட்டக்காரரவர்களும் டாக்டர் நாயுடு அவர்களுக்கு எழுதி விடுவதாகவும் டாக்டர் சுப்பராயன் அவர்களிடம் ஒப்புக்கொண்டதாகவும் தெரிகிறது. இதன் பயனாய் தேர்தல் நிலைமை மாற்றமடைந்தே தீரும். இதன் பயனாகத் தோழர்கள் அவனாசிலிங்கமும், நாயுடுவும் தங்கள் அபேக்ஷகர் ஸ்தானத்திலிருந்து விலகிக்கொள்ளுவார்களோ அல்லது நடந்தது நடக்கட்டும் என்று துணிந்து நிற்பார்களோ தெரியாது.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் இந்தத் தொகுதியை ஒரு பெண் அபேக்ஷகருக்காக எல்லா கட்சியார்களும் போட்டி இல்லாமல் விட்டுவிட வேண்டும் என்றும், இந்தியா முழுமைக்கும் ஒரே ஒரு பெண்தான் இந்திய சட்டசபைக்கு நிற்க சகல விதத்திலும் தகுதியோடு முன்வந்திருப்பதாகவும், இதன் பயனாய் காங்ரெஸ் பெண்கள் விஷயத்தில் கொண்டுள்ள கொள்கையைக்காட்ட ஒரு சந்தர்ப்பமேற்பட்டிருக்கிறதென்றும், தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கும், டாக்டர் வரதராஜுலுவுக்கும் தெரிவித்து இருப்பதாகவும் தெரிகிறது. இதனாலெல்லாம் தான் அபேக்ஷகர்கள் தன்மையே மாறுபட்டாலும் மாறுபடக்கூடும் என்று எதிர்பார்க்க இடமேற்படுகின்றது.

மற்றும் ஒரு விஷயம் அதென்னவெனில் டாக்டர் நாயுடுவை திருச்சி பொதுக்கூட்டத்தில் "டாக்டர் சுப்பராயன் மனைவியார் கோவைத்தொகுதிக்கு ஒரு அபேக்ஷகராய் நின்றால் அப்

போது உங்கள் நிலை என்ன? என்று ஒருவர் கேட்டார். அதற்கு பதிலளிக்கையில் தோழர் ராதாபாய் அம்மாள் அவர்கள் நிற்பதாய் இருந்தால் எனக்கும், அந்தம்மாளுக்கும் போட்டி இல்லாமல் இருக்கும்படியாக நடந்து கொள்ள முயற்சிப்பேன். எங்களுக்குள் போட்டிப்பிரசாரம் நடக்க இடம் வைத்துக்கொள்ள இஷ்டமில்லை" என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு சமயம் தோழர் ராதாபாயம்மாள் விஷயத்தில் நாயுடு ஒப்புக்கொண்டு காங்கிரஸ் விட்டுக்கொடுக்க வில்லையானால் ராதாபாயம்மாள் வேறு தொகுதியில் நின்று கொண்டு கோவை, சேலம் ஜில்லா வேளாள சமூக ஓட்டுகளை டாக்டர் நாயுடுவுக்கு அனுகூலமாய் திருப்ப முயர்ச்சி செய்யப்போவதாயும், தெரிய வருகின்றது.

தோழர் ராதாபாயம்மாளுடன் போட்டி போட விரும்பவில்லை என்று எப்படி டாக்டர் நினைக்கிறாரோ அதுபோலவே செங்கல்பட்டு, தென்னாற்காடு ஜில்லா தொகுதியில் அபேட்சகராய் இருக்கும் திவான்பகதூர் எம். கே. ரெட்டியாரும், ராதாபாயம்மாள் நிற்பதாயிருந்தால் போட்டி போட விரும்பவில்லை என்பதாய் தெரிகிறது. அப்படியானால் ஜஸ்டிஸ்கட்சி அபேட்சகரும் அம்மாள் விஷயத்தில் போட்டி போட மாட்டார்கள். இவர்கள் இருவரும் போட்டி போட முன்வரவில்லையானால் மிஞ்சுவது தோழர் முத்துரங்க முதலியாரே ஆவார்கள். அவர் நிற்பதும் ஒன்றுதான் உட்காருவதும் ஒன்றுதான். ஆதலால் அந்த தொகுதியிலும் ராதாபாயம்மாளுக்கு சுலபமாக ஆகக்கூடும்.

இப்படியும் ஒரு உத்தேசம் இருப்பதாவும் தெரிகிறது. எனவே ஏதோ ஒரு விதத்தில் அசம்பளி தேர்தலில் ஒருமாற்றம் ஏற்படக்கூடும் என்று தெரிகிறது.

## ஜஸ்டிஸ்பத்திரிகையின் நிர்வாகம்.

ஜஸ்டிஸ் பத்திரிகைக்காக இது வரை சுமார் 4,5 லக்ஷரூபாய் வரையில் பொது மக்களிடமிருந்து உதவித்தொகையாகவும், மந்திரிகள் சம்பளத்திலிருந்து பார்ட்டி (கக்ஷி) உதவித்தொகையாகவும் பெற்றிருக்கலாம். இது தவிர இன்றும் பொப்பிலி ராஜா அவர்களால் ரூ 2000, 3000 கொடுக்கப்பட்டு வருகிறது இவ்வளவு இருந்தும் அப்பத்திரிகை ஒரு தடவை "இன்சால்மெண்டு" கொடுத்தாய் விட்டது. பலரது கடனுக்கு நாமம் சாத்தியுமாய் விட்டது. மறுபடியும் பொப்பிலி ராஜா சுமார் 50 ஆயிரம் ரூபாய் போல் செலவழித்துமாய் விட்டது. இந்த நிலையில் பத்திரிகை எவ்வளவு போகின்றது என்று சொல்ல நமக்கே வெட்கமாய் இருக்கிறது. இவ்வளவு யோக்கியதையில் அது பிரசுரிக்கிற முறையும் சிரிப்புக்கிடமானது என்று தான் சொல்லவேண்டி இருக்கிறது.

தோழர் சர் ஷண்முகம் அவர்களுடைய பிரசங்கங்களையும், நடவடிக்கைகளையும் கூட சரிவரப் பிரசுரிப்பதில்லை. சுயமரியாதைக்காரரின்சமூக சம்மந்தமான வேலைகளைக்கூட சரிவர பிரசுரிப்பதும் இல்லை. இன்னும் அதன் யோக்கியதை சொல்வதென்றால் நமது பல்லைக்குத்தி நாமே முகர்ந்து பார்ப்பது போல் இருக்குமாதலால் விட்டு விடுகிறோம்.

மாதம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஜஸ்டிஸ் பத்திரிகையின்பேரால் பாழாக்கும் பொப்பிலி ராஜா அவர்களுக்கு இந்த விஷயம் தெரியுமா? தெரியாதோ என்று சந்தேகிக்கின்றோம் இதைப்பற்றி பல தடவை ஞாபகப்படுத்தப்பட்டிருக்கிறது. என்றாலும் இதுவே முதல் தடவையாகவும் கடைசித்தடவையாகவும் இருக்கவேண்டும் என்கின்ற ஆசையின் பேரில் இதை எழுதுகிறோம்.

## ஈரோடு முனிசிபாலிடிக்குக் கமிஷனர்.

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு தோழர் T. புருஷோத்தம முதலியார் அவர்கள் கமிஷனராக நியமிக்கப்பட்டு 24-9-34ந் தேதி சார்ஜ் ஒப்புக்கொள்ளப்போகிறார். இவர் செக்கரெட்டேரியட்டில் பனகால் ராஜாவும், டாக்டர் சுப்பராயனும் முதல் மந்திரியாய் இருந்த காலத்தில் பர்ஸனல் கிளார்க்காய் இருந்தவர். தோழர் சௌந்திரபாண்டியன் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டாய் இருந்த காலத்தில் அந்த போர்டுக்கு காரியதரிசியாய் இருந்தவர். ஸ்தல சுய ஆட்சி விஷயங்களில் நீண்ட அனுபவமுள்ளவர்.

## ஈரோடு சேர்மென்

தோழர் ஈ. வெ. ராமசாமி முனிசிபல் கவுன்சிலராய் இருக்க ஒப்புக்கொண்டதைக் குறித்து பலவித அபிப்பிராயங்கள் பத்திரிக்கைகளில் வெளியாகி இருக்கின்றன அவற்றில் ஒன்று அவர் சேர்மெனாக வரக்கூடும் என்பது. இது விஷயமாய் தோழர் ஈ. வெ. ராமசாமியைக் கண்டு கேட்டதில் தான் கவுன்சிலராக வந்ததில் விசேஷ இரகசியம் ஒன்றும் இல்லை என்றும், தனக்கு சேர்மெனாய் வரவேண்டுமென்கின்ற ஆசை இல்லை என்றும் தோழர் எம். சிக்கையா அவர்களுக்கும் அந்தஆசைஇல்லைஎன்றும்தோழர்கான் சாஹிப் கே. எ. ஷேக் தாவுத் சாயபு பகதூர் அவர்களே தான் போட்டி இன்றிசேர்மெனாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று நான் முதல் கொண்டு எல்லோரும் விரும்புகிறோம் என்றும் அந்தப்படி தான் நடக்குமென்றும், முனிசிபல் கவுன்சில் எலக்ஷன்களில் போட்டி போடுபவர்கள் இக்தப் பிரச்சினையைக் கிளப்பி அதை தங்களுக்கு சாதகமாக உபயோகித்துக் கொள்வதைக்கண்டு வருந்துவதாகவும் கூறினார்.

## சர். ஆர். கே. ஷண்முகத்தின் திக்குவிஜயம்.

இம்மாதம் 12ந்தேதி கோவை, 13ந் தேதி ஈரோடு, 14ந் தேதி திருச்சி, 15ந் தேதி திண்டுக்கல், மதுரை, 16ந் தேதி விருதுநகர், 17, 18, 19, 20 தேதிகளில் திருநெல்வேலி, தூத்துக்குடி முதலிய இடங்களைப் பார்த்து விட்டு 20, 21 தேதிகளில் நாட்டுக்கோட்டை செட்டிமார் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்வார். இதுவரை சென்ற விடங்களிலெல்லாம் சிறப்புடனும், மரியாதையுடனும் வரவேற்கப்பட்டதுடன், 100-க்கு 90 ஓட்டர்கள் தோழர் ஷண்முகம் அவர்களுக்கே தங்கள் ஓட்டுகளைக் கொடுப்பதாக வாக்களித்ததுடன் அனேகர் கூடவே தொடர்ந்து வந்து வேலையும் செய்கிறார்கள்.

வியாபார சம்பந்தமான விஷயங்களைப்பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் சதாவதானி போல் பதில்கள் சொல்லி திருப்தி செய்து வருகிறார் கேள்வி கேட்போர்களை அறை கூவி அழைக்கிறார். பலர் ஷண்முகத்துக்கு ஓட்டுச்செய்யும் கௌரவம் நமக்குக் கிடைத்ததே என்று கருதி முக மலர்ச்சியுடன் மகிழ்ச்சிக் குறி காட்டுவதைக்கண்டு மகிழ்கிறார். காங்கிரசுக்காரர்களின் வகுப்பு துவேஷ உணர்ச்சி வெளியாக்கத் தக்க நல்லதொரு சமயம் ஏற்பட்டதென்றே சுயமரியாதைக்காரர்கள் ஆனந்தத்தாண்டவமாடுகிறார்கள். ஆங்காங்குள்ள காங்கிரசுக்காரர்கள் தடையத்துடன் சிக்கிக் கொண்ட திருடர்கள் போல் பேந்தப் பேந்த விழிக்கிறார்கள்.

ஆகவே சர். ஷண்முகத்தின் சுற்றுப்பிரயாணம் ஒரு திக்கு விஜயம் என்று மாத்திரம் சொல்வதற்கு இல்லாமல், அது கடவுள், கதர், காங்கிரஸ், காந்தி பக்தர்களுக்கு ஒரு கடைகாலம் என்றும் சொல்லலாம்.

## இந்திய சட்டசபைத் தேர்தல்.

### தோழர்கள் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்கும், வி. வி. ராமசாமி அவர்களுக்கும் பெருத்த ஆதரவு.

1934-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13ந்தேதி இரவு 10மணிக்கு அருப்புக்கோட்டை பகுத்தறிவு நிலயத்தில் வழி காட்டி ஆசிரியர் கல்லூரணி தோழர் க. அ. புன்னைமுத்து தலைமையில் கூடிய ஸ்பெஷல் நிர்வாக மீட்டிங்கில் வரப்போகும் இந்திய சட்டசபைத்தேர்தலில் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா பொது தொகுதிக்கு விருதுநகர் முனிசிபல் சேர்மன் தோழர் வி. வி. ராமசாமி அவர்களுக்கும், சென்னை வர்த்தக தொகுதிக்கு தோழர் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்கும் ஆதரவளிக்கும்படி வாக்காளர்களை வேண்டிக் கொள்வதாகவும், பிரமுகர்களனைவரும் அது விஷயத்தில் பெருத்த ஆதரவளிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறியதென காரியதரிசி எழுதுகிறார்.

## வாலாஜாபாத் இந்துமத பாடசாலை.

இப் பாடசாலையில் 485 மாணவர்கள் வாசிக்கின்றார்கள். 26 ஆசிரியர்கள் வேலை செய்கின்றார்கள். தச்சுதரி, புத்தகம் கட்டுதல், தையல் முதலிய கைத்தொழில்களும் கற்றுக்கொடுக்கின்றார்கள். மாணவர் விடுதியும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதில் 40 மாணவர்கள் இருக்கின்றார்கள். என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

# மார்க்கட்டு நிலவரம்.

(சித்திரபுத்திரன்)

தமிழ் நாட்டில் மார்க்கட்டு நிலவரம் தெரியப்படுத்தி வெகுநாள் ஆகிவிட்டதால் இது சமயம் இரண்டொரு சரக்குகளுக்கு மாத்திரம் நிலவரம் எழுதுகிறோம்.

பெண்கள்.

செட்டிநாட்டில் ஒரு பெண்ணுக்கு (முன்விலை) 35000 முதல், 45000 ரூபாய் வரை இருந்து வந்ததானது இப்போது சவுத்துப்போய் ஒரு சைபருக்கே மோசமேற்பட்டு 4000, 5000-ம் விலையில் அசல் செட்டிநாட்டுப்பெண்கள் தாராளமாய் கிடைக்கும்நிலைமைக்கு வந்து விட்டது. காரணம் சுயமரியாதைத் தேசத்திலிருந்து ஏராளமான சரக்குகள் (பெண்கள்) வந்து இறங்கத் தலைப் பட்டுவிட்டன. ஆதலால் வெளிநாட்டுச் சரக்குகளை (சுயமரியாதைப் பெண்களை) செட்டி நாட்டுக்குள் வராதபடி வெளிநாட்டுச் சரக்குகளுக்கு வரிபோடவேண்டுமாய் செட்டிமார்களுள் சர்க்காருக்கு (சமூகத்தாருக்கு) விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். அப்படி அரசாங்கத்தார் (சமூகத்தார்) வரிப்போடுவார்களானால் பெண்கள் இருக்கிற நாட்டுக்கே, குடிபோய்விடுவதாக பெண் வாங்குவோர்கள் கூடிப்பேசி முடிவு செய்து தீர்மானத்தை அரசாங்கத்துக்கு (தங்கள் சமூகத்தாருக்கு) தெரிவித்து இருப்பதாகத் தெரிகிறது.

ஓட்டுகள்.

முனிசிபல் ஓட்டர்களுக்கு இதுசமயம் கிராக்கி அதிகம். பொப்பிலி ராஜாவின் ஒரு அறிக்கையின் பயனாய் முனிசிபல் ஓட்டுகளுக்குக் கிராக்கி யற்று சில இடங்களில் அவ்வளவையும் சமுத்திரத்தில் கொட்ட வேண்டிவருமோ என்று விவசாயிகள் (ஓட்டர்கள்) கவலைப் பட்டுக்கொண்டிருந்தனர். நல்லவேளையாய் அந்த உத்திரவு வரவில்லை. எல்லா முனிசிபாலிட்டிகளுக்கும் தேர்தல் இந்த வருஷத்திலேயே அதுவும் இக்தமாதத்திலேயே நடக்க வேண்டுமென்று கட்டளையிட்டுவிட்டதால் ஓட்டர்கள் நிலவரம் வெகு கிராக்கியாகி விட்டது.

ஈரோடு.

குறிப்பாக ஈரோட்டில் சிலவார்டுகளில் ஓட்டுச் சிலவே இல்லமால் போய் விட்டது. சில வார்டுகளில் மொத்தத்தில் எதிர் அபேக்ஷகருக்கு 250 முதல் 500 ரூபாய் வரை ஆகிவிட்டது.

சில வார்டுகளில் அதாவது குடியானவர்களே சம்பந்தப்பட்ட வார்டுகளில் ஓட்டு ஒன்றுக்கு 2 ரூபாய்முதல் 3 ரூபாய் வரை.

சிலவார்டுகளில் அதாவது வியாபாரிகள் சம்பந்தப்பட்ட வார்டில் ஓட்டு ஒன்றுக்கு 10ரூபாய் முதல் 15 ரூபாய், 20 ரூபாய் கூட ஆகிவிட்டது என தெரிகிறது.

சில வார்டில் அதாவது காங்கிரசு சம்பந்தப்பட்ட வார்டு என்று சொல்லப்படுவதில் ஓட்டு ஒன்றுக்கு 15 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையிலும், சில ஓட்டுகள் விஷயத்தில் 40, 50 ரூபாய் வரையில் கூட விலை ஏறிவிட்டது.

சுமார் 300 ஓட்டர்கள்உள்ள ஒரு வார்டுக்கு ஒரு அபேக்ஷகர் 3000 ரூ எடுத்து வைத்திருப்பதாகத் தெரிகின்றது. மற்றொரு அபேக்ஷகர் 5000 ரூஎடுத்துவைத்துஎலக்ஷன்இன்னும் 10 நாள் இருக்கும்போதே 2000 ரூபாய்க்கு மேல் செலவழித்துவிட்டதாகவும் தெரிகின்றது. அதிகப் பணம் செலவு செய்பவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது பார்வதிக்கு பரமசிவன் சொன்ன உறுதி மொழியாகும்.

ஆகவே இந்த எலக்ஷன் முறை ஏழை ஓட்டர்கள் பிழைக்க அரசாங்கத்தார் செய்த தர்மமாகும். ஆதலால் ஓட்டர்கள் பணம் கொடுப்பவர்களை வாழ்த்துவதைவிட இப்படிப்பட்ட தேர்தல் முறையைக் கற்பித்த அரசாங்கத்தார் நீடுழி காலம் சிரஞ்சீவியாய் எப்படிப்பட்ட சிரஞ்சீவியாய்? மார்க்கண்டன், அனுமார், விபூஷணன் போன்ற சிரஞ்சீவியாய் அல்ல. சூரியன் சந்திரன் போன்ற சிரஞ்சீவியாயும் அல்ல. அவைகள் கூட ஒரு காலத்தில் இல்லாமல் போய்விடும். மற்றெப்படிப்பட்ட சிரஞ்சீவியாய் என்றால் கல்லும், காவேரியைப்போல் சிறஞ்சீவியாய் இருக்க வேண்டுமென்று வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சில கடவுள்களும் இந்த அரசாங்கத்துக்கு சிறஞ்சீவிப்பட்டம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றன.

ஏனெனில்ஓட்டுக்குவிலையாக ஓட்டர்களுக்குப்பணம் கொடுப்பது மாத்திரமல்லாமல் கோவில்கட்ட, மசூதி கட்ட, சர்ச்சு கட்ட, என்று 100, 500, 1000 கணக்காய் ரூபாய் கொடுக்கவேண்டி இருப்பதால் அந்தந்த மதக்கடவுள்கள் இப்படிப்பட்ட எலக்ஷனை உண்டாக்கிய அரசாங்கத்தை ஆசிர்வதிக்க கடமைப்பட்டிருக்கின்றன. நல்லவேளையாக ஈரோட்டைப் பொறுத்தவரை ஓட்டுகளுக்கு ஜாதி சண்டைகளை விலையாகக் கொடுக்கவேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது. அதன் பெருமை சேர்மெனுக்கே சேர வேண்டியது.

---

## சுயமரியாதைச் சங்கம்

## பொன்மலை

18-9-34ந் தேதி 7மணிக்கு சங்க ஆபீஸில் தலைவர் எம். வி. துரைசாமி அவர்கள் தலைமையில் ஒரு நிர்வாக கூட்டம் நடைபெற்றது அது சமயம் திருச்சி, தஞ்சை தொகுதியில் இந்திய சட்டசபைக்கு நிற்கும் தோழர் ஆர். வேணுகோபால் செட்டியாரை ஆதரிக்க வேண்டுமென்றும் இன்னும்பல தீர்மானங்கள் நிறைவேறியது. தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் இரவு 8-30 மணிக்கு கலைந்தது.

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுரை எழுதியிருக்கிறார். ஆசிரியர் பேசினுக் உலக பொருளாதார நிபுணர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார். அவர் இங்கிலாந்து தேசவாசியுமல்ல. ஜர்மன் தேசத்தைச் சேர்ந்தவர். இத்தகைய இவர் ஒட்டவா ஒப்பந்தத்தைப்பற்றிக் கூறும் போது இந்த ஒப்பந்தத்தினல் இந்தியாவுக்கு நன்மையோடு மட்டல்லாமல், இந்திய வியாபாரத்திற்கு இன்றியமையாதது என்றும் கூறுகிறார். இவருடைய அத்தாட்சியை ஒப்புக் கொள்ளுகிறீர்களா? வியாபார சம்பந்தமற்ற ராஜகோபாலாச்சாரியாரின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? ஆசிரியர் பேசினுக்கின் அபிப்பிராயத்திற்கு தோழர் ராஜகோபாலாச்சாரி என்ன பதில் கூறுவார்?

ஒப்பந்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட வியாபார நிலைமையைப்பற்றி சற்று யோசிப்போம். ஒப்பந்தத்திற்குப் பின் அரிசி, கடலை, எண்ணெய் முதலிய சறக்குகளின் ஏற்றுமதி இரட்டித்திருக்கிறது. கடுகு எண்ணெயின் ஏற்றுமதி 4 மடங்கு அதிகப்பட்டிருக்கிறது. யாளி விதை ஏற்றுமதியில் 12 பங்கு கூடியிருக்கிறது. மலையாளத்தில் செய்யப்படும் கயிற்றுப்பாய் ஒப்பந்தத்திற்கு முன் ஏற்றுமதி செய்யப்படவே இல்லை. இப்பொழுது 4400000 ரூபாய் பெறுமான பாய் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. தோல் ஏற்றுமதியில் 7 மடங்கு அதிகப்பட்டிருக்கிறது. இதேபோல் இங்கிலாந்திலிருந்துஇறக்குமதியாகும் சரக்குகளும் அதிகப்பட்டிருக்கிறது. ஆகவே வியாபார சம்பந்தம் விருத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று வெளியாகிறது. இதன் மூலமாக முடிவில் யாருக்கு லாபம் என்று பார்க்க வேண்டுமானல் ஒப்பந்தத்திற்கு முன் நடந்துவந்த தீர்வை விகிதங்களை ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டும். ஒப்பந்தத்திற்குமுன் சகல சரக்குகளுக்கும் நாம் இங்கிலாந்திற்கு வருஷம் ஒன்றுக்கு எட்டு கோடி ரூபாய் தீர்வை மூலம் செலுத்தி வந்தோம். இங்கிலாந்திலிருந்து ஐந்து கோடி ரூபாய் தீர்வையாக வசூல் செய்து வந்தோம். ஆகவே ஒப்பந்தம் ஏற்பட்டதன் மூலமாக வருஷம் ஒன்றுக்கு மூன்றுகோடி ரூபாய்க்கு மேலாக மிச்சம் ஏற்பட்டிருக்கிறது,

## காங்கிரஸ்காரர்களின் மனப்பான்மை !

கடைசியாக இன்னும் ஒரு விஷயம் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஒட்டாவாவில் துரோகம் செய்தேன் என்பதற்காக வேண்டி என்னை எதிர்க்கும் காங்கிரஸ் வாதிகள் நான் சட்டசபை பிரஸிடெண்டு ஸ்தானத்திற்கு மறுபடியும் அபேக்ஷிக்கா விட்டால் எனக்குப் போட்டி போடுவதில்லை என்று பகிரங்கமாகக் கூறுகிறார்கள். நான் பிரஸிடெண்டு ஸ்தானத்திற்கு அபேக்ஷித்தால் ஒட்டவா ஒப்பந்தம் துரோகமாகவும், அபேக்ஷிக்காவிட்டால் துரோகம்செய்யாததாகவும் போய்விடுமா என்று கேட்கிறேன். இதிலிருந்து காங்கிரஸ் வாதிகளின் மனப்பான்மை வெளியாகிறதல்லவா?

அதற்குப் பின் சேர்மன் ஸ்ரீ. வி. வி. ராமசாமி வந்தனோபசாரம் கூற கூட்டம் கலைந்தது. இரவும் பல பிரமுகர்களை நேரில் கண்டு பேசினார்கள். பொதுவாக விருது நகரில் உள்ள வியாபாரத் தொகுதி ஓட்டர்கள் எல்லாரும் சர். ஷண்முகம் செட்டியாருக்கே ஓட்டுச் செய்வார்கள் என்று தெரிகிறது.

17-9-34ந்தேதிகாலை சர். ஷண்முகமும், தோழர் சௌந்திரபாண்டியரும் மோட்டாரில் திருநெல்வேலிக்குப் பிரயாணமானார்கள்.

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ம், வெளியூர்களிலிருந்தும் ஆண்களும், பெண்களுமாக ஏராளமாக வந்திருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் தோழர்கள் ஆர். மருதை (உறையூர்) எஸ். நீலாவதி, அ. சுந்தரி (சென்னை) கே. துரைசாமி, (நாகை) எம். மாரியண்ணன், (துறையூர்) டி. ஆர். பாலகிருஷ்ணன், (பீமநகர்) எம். பெருமாள், பி செபஸ்த்தியான் இன்னும் பலர் விஜயம் செய்திருந்தார்கள்.

திருமண ஒப்பந்த வைபவத்திற்கு தோழர் ஆர். மருதை அவர்கள் தலைமை வகித்தார்கள். தம்பதிகள் மணஒப்பந்தத்தைகூறி மாலை மாற்றிக்கொண்டனர். திருச்சி வாசகனேரி Dr. டி. எம். நாயர் வாசகசாலை வாலிப சங்கத்தார் தம்பதிகளுக்கு ஓர் வாழ்த்துபத்திரம் வாசித்துக்கொடுத்தனர். தோழர் எஸ். அபிமன்னன் அவர்கள் திருமணத்திற்கு வரமுடியவில்லை என்று வருந்தி மணமக்களை வாழ்த்தி வந்திருந்த கடிதங்களைப் படித்தார்.

பின்தோழர்கள் மரியண்ணன், டி. ஆர். பாலகிருஷ்ணன், டி. ஏ. ஜி. ரெத்தினம், நாகை துரைசாமி, எஸ். நீலாவதி முதலியவர்கள் "சுயமரியாதைத்திருமணம்" என்பதுபற்றிபேசினார்கள். தோழர் எஸ். நீலாவதி அவர்கள் பேசும்போது பெண்களைப்பற்றியும் "பழைய காலத்திருமணமும் சுயமரியாதைத் திருமணமும்" என்பதைப்பற்றியும் வந்திருந்த ஜனங்கள் மனதில் நன்கு பதியுமாறு விளக்கமாகவும், தெளிவாகவும் சுமார் ½ மணி நேரம் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் பி. சிவபிச்சை அவர்கள் வந்தனோபசாரம் கூற திருமண வைபவம் இனிது முடிந்தது. பகல் 12 மணிக்கு சிவ பிச்சை இல்லத்தில் ஒரு சமபந்தி விருந்து நடைபெற்றது என எஸ். அபிமன்னன் எழுதுகிறார்.

## மன்னார்குடியில் சுயமரியாதைத் திருமணம்.

12-9-34ந்தேதி புதன்கிழமை சுயமரியாதைச்சங்கத்தில் நீடாமங்கலத் திற்கடுத்த பண்ணி மங்கலம் கிராமம் தோழர் வீரப்பன், பூஷணத்தம்மாள் இருவருக்கும் பூரண சுயமரியாதைக் கொள்கைப்படி திருமண ஒப்பந்தம் நடைபெற்றது.

ஷை வைபவத்திற்கு தோழர் எஸ். ராமநாதன் அவர்களின் சகோதரி புதல்வர் தோழர் பி. கல்யாண சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார். திருமணம் என்பதுபற்றி தோழர்கள் ராஜசாகிப், கனகசபைபிள்ளை, எம். ஜி. நடராஜ பிள்ளை, கணபதிக்கண்டியர், வி. எஸ். சோமசுந்திரம், எஸ். ஜி. வெங்கிட்டராமன், எம். தருமலிங்கம், கே. ஆர். ஜி. பால் முதலியவர்கள் பேசினார்கள். கூட்டத்திற்கு சுமார் 600 ஆண்களும், சுமார் 60 பெண்களும் வந்திருந்தனர். புகைப்படமெடுக்கப்பட்டது. கே. ஆர். ஜி. பால் வந்தனோபசாரம் கூறியதும் மத்தியானம் 25பேருக்கு சமபந்தி போஜனம்நடத்தப்பட்டது. கல்யாணத்தின் மொத்தச்செலவு ரூ. 4-6-0 தான் என கே. ஆர். ஜி. பால் எழுதுகிறார்.

## ஸ்ரீவில்லிப்புத்தூர்

### தோழர்கள் குருவம்மாள்—கைலாச சுந்தரம் திருமணம்.

இந்நகர் பெருமாள் பட்டி தெருவில் தோழர் சி. நி. கைலாச சுந்தரம் அவர்களும், தோழர் வீ. குருவம்மாள் அவர்களும் 12-9-34ந்தேதி காலை 9மணிக்கு தோழர் ஏ. தெய்வநாயகம் அவர்கள் தலைமையில் சுயமரியாதை முறைப்படி தங்கள் வாழ்க்கைத்துணை ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார்கள். திருமணத்திற்கு வந்திருந்தவர்களை தோழர் ஞா. பி. ஞானதேசிகம் அவர்கள் வரவேற்று உபசரித்தார்கள். தலைவர் திருமண முறைகளைக்குறித்தும், இராஜபாளையம் தோழர் ஆர். எம் ராமசாமி அவர்களும், சேத்தூர் தோழர். டி. என். பெரிய கூடலிங்கம் அவர்களும் தம்பதிகளின் சுயமரியாதை உணர்ச்சியைப்பற்றியும் நன்றிகூறி மணமக்களை வாழ்த்தினர்கள். தோழர் வி. முத்தையா அவர்கள் நன்றி கூறிய பின் சந்தன தாம்பூலம் வழங்க திருமணம் நிறைவேறியது. பிற்பகல் 1மணிக்கு சமபந்திவிருந்து நடந்தது.

## ஸ்ரீவில்லிப்புத்தூர்.

### தோழர்கள் ஆதிலட்சுமி—வீரபத்திரன் திருமணம்.

இந்நகர் பெருமாள் பட்டி தெருவில் தோழர் வி. வீரபத்திரன் அவர்களும், தோழர் வி. ஆதிலட்சுமி அவர்களும் தோழர் ஏ. தெய்வநாயகம் அவர்கள் தலைமையில் 13-9-34 ந்தேதி காலை 8மணிக்குச் சுயமரியாதை முறைப்படி வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் செய்து கொண்டனர். திருமணத்திற்கு வந்திருந்தவர்களை தோழர் ஞா. பி. ஞானதேசிகம் அவர்கள்வரவேற்று உபசரித்தார்கள். தலைவர் திருமணம் என்பது பற்றிப் பேசியபின் தோழர் கே. முத்துசாமி அவர்கள் "பார்ப்பனச்சடங்குகள் பயனற்றவை" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றி, தம்பதிகளின் சுயமரியாதை உணர்ச்சியைப் பற்றி நன்றி கூறி வாழ்த்தினர். தோழர் வி. முத்தையா அவர்கள் நன்றி கூறி சந்தன தாம்பூலம் வழங்கியதும் திருமணம் நிறைவேறியது.

## சீர்திருத்தத் திருமணம்.

நாங்குநேரியில் 14-9-34ந்தேதி வெள்ளிக்கிழமை இரவு சிங்கிகுளம் சங்கரலிங்கம் அவர்கள் புதல்வி தோழர் நாகம்மாளும், நாங்குனேரி எஸ். சுடலைமுத்து அவர்கள் புதல்வர் தோழர் சுப்பையாவும் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அவ்வமயம் திருநெல்வேலி ஜில்லா சமதர்ம சங்கக்காரியதரிசியும், தொழிலாளர் சங்கக்காரியதரிசியுமாகிய தோழர் ஜி. ஜி. எல். ரெங்கநாதம் அவர்கள் தலைமை வகித்தார்கள். தம்பதிகள் யெவ்வித மூடப்பழக்க வழக்கமின்றிபுரா நமது தாய் மொழியிலேயே பிறமொழிக்கலப்பின்றி கற்பதரு எம். எஸ். பாண்டியனால் வெளியிடப்பட்ட வாழ்க்கைத்துணை யொப்பந்தப் பாக்களையும், வாக்கியங்களையும் முறையே கூறி முடித்து திருமணம் செய்து கொண்டார்கள், பின்னர் தோழர் ஏ. முத்துகிருஷ்ணனவர்கள் சமதர்மக்கீதமும், தோழர் கே. என். தங்கவேலு அவர்கள் சீர்திருத்த திருமணத்தைப்பற்றியும், தோழர் வி. எம். சாமியவர்கள் மருத்துவர் மூடப் பழக்க வழக்கத்தைப்பற்றியும் தோழர் வி. எஸ். ஏ. வெங்கட்ராம் அவர்கள் பெண்கள் உரிமையைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர்களுக்கு பூமாலை சூட்டப்பட்டு முறையே வந்தனோபசாரங் கூறி சமபந்தி விருந்து ஒன்று நடந்தது. திருமணவைபவம் இனிது நிறைவேறிற்று. இத்திருமணத்தை முன்னிட்டு 'பகுத்தறிவு' பத்திரிகைக்கு நன்கொடையாக ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது

## அடியோடு வீட்டை நகர்த்தல்.

மாஸ்கோவிலுள்ள 4 மாடிகள் கொண்ட கல் வீடொன்று 117 அடி தூரம் வரை தள்ளி வைக்க வேண்டியதா யிருக்கிறது. அந்த வீட்டில் 370 பேர் வசிக்கின்றனர். அதனுடைய கனம் 6,000டன்களாம். அந்த வீட்டை 117 அடி தூரம் வரை இழுத்து வைக்கும் போது அதனுள் வசிப்பவர்கள் எவரும் வெளியிற் போகவேண்டியதில்லையாம்; உள்ளேயே இருக்கலாமாம். தண்ணீர்க் குழாய் மின்சாரக் கம்பி முதலிய எவற்றினையும் அறுக்கவும் வேண்டிய தில்லையாம். உள்ளன உள்ளபடியே யிருக்க, அவ்வீட்டை 117 அடி தூரம் வரைச் சுலபமாகத் தள்ளி வைத்துவிட முடியுமென்று அந்த ருஷிய இஞ்சினீர்கள் கூறுகின்றனர்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

காங்கிரஸ் அமைப்புத் திட்டம் சம்பந்தமாகக்கொண்டுவர உத்தேசித்துள்ள முக்கியமான திருத்தப் பிரேரணைகளை மட்டுமே நான் குறிப்பிட்டேன்.

ஆகவே காங்கிரஸ் வாதிகள் அதனைப் பக்ஷபாதமின்றி பரிசீலனை செய்து, தாரதம்மியங்களைச்சீர் தூக்கி என்னை விலக்க வேண்டுமானால் விலக்கி தங்களுக்கு எது நியாயமென்று படுகிறதோ அதன்படி நடக்கட்டும். (அ. பி.)

## "நச்சுப்பொய்கை" தடையுத்தரவுரத்து.

தோழர் சி. ஏ. அய்யாமுத்து அவர்களால் எழுதப்பட்ட "நச்சுப்பொய்கை" அல்லது "நாரியர் வேட்கை" என்னும் நாடகத்தை நடத்தக்கூடாதென மதுரை "தேவிபாலவிநோதசபை யாருக்கு சேலம் ஜில்லா கலெக்டரவர்கள் பிறப்பித்திருந்த தடையுத்தரவை ரத்து செய்து விட்டார் என்பதாக தெரிய வருகிறது.

## ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.

## மலையாளம் சில்க்.

2¼-வீதி. 5-கீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு " 14-0
ஷை 4½-கீளம் டஜன் 1-க்கு " 10-0
3-வீதி 8-கீளம் வேஷ்டி 1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.

## பெண்ணுரிமைக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கடலூர்ச்சிறையில் இயற்றியது.
விலை அணா 0—1—0.
கிடைக்குமிடங்கள்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.
R. கிஸன், கோவை.

## சமதர்மக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் இயற்றியது.
விலை பை. 6.
கிடைக்குமிடங்கள்:—
குடிஅரசு பதிப்பகம் ஈரோடு.
சமதர்மக் காரியாலயம் ஜோலார்பேட்டை.

# கல்வி மந்திரிக்கு வேண்டுகோள்

திருச்செங்கோடு தாலூக்கா ஆதி திராவிட மகாஜன சங்கத்தின் காரியதரிசி டி. ஆர். சுந்தரம் பின் வருமாறு தெரிவிக்கின்றார்.

வெகுகாலமாய் உயர் ஜாதி என்று சொல்லிக்கொள்ளும், ஜாதி இந்துக்களால் நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு மிகப் பரிதாபகரமான நிலைமையிலிருந்து வரும் தாழ்த்தப்பட்ட ஜனங்கள், தங்களுக்கு சமுதாயத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் தங்களுக்குள்ள சிக்கல்களையும், கஷ்ட நஷ்டங்களையும் நீக்குவான் பொருட்டு ஆங்காங்கு ஸ்தவ ஸ்தாபனங்களிலும் இதர சர்க்கார் ஸ்தானங்களிலும் காருண்ய கவர்ண்மெண்டார் அவர்களால் ஆதித்திராவிடர்களுக்கென பிரதிநிதித்துவம் வளங்கப்பட்டிருக்கின்றது. அதாவது முனிசிபாலிட்டிகளிலும் ஜில்லாபோர்டுகளிலும் கல்வி சபைகளிலும் உயர்தரக் கல்விச் சபைகளிலும் (Secondeary Education Boards) அங்கத்தினர்களின் ($\frac{1}{12}$) பன்னிரண்டில் ஒரு பாகத்தை ஆதித்திராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் அந்த ஸ்தாபனங்களிலுள்ள ஆதித்திராவிட ஸ்தானங்களுக்குத் தகுந்த யோக்யதையும், பொருப்பும் அந்தஸ்தும் உடைய ஆதித்திராவிட பிரமுகர்களை அந்தந்த டிபார்ட்மெண்ட் அதிகாரிகளால் நியமனம் செய்ய வேண்டியிருக்கின்றது. அப்படிக்கிருந்தும் சேலம்ஜில்லா Seconcary Education Board இல் ஆதித்திராவிட மெம்பர் ஒருவரையும் நியமிக்காதது மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கின்றது. உற்சாகமும் ஊக்கமும் உடையவர்களும் Secondary Education பூர்த்தி செய்தவர்களுமான அனேக ஆதித்திராவிடத் தோழர்களிருந்தும் மேற்படி Secondary Education Board இல் தாழ்த்தப்பட்டவர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஸ்தானத்தை இதர சமூகத்தினர்கள் அநுபவித்துக்கொண்டிருப்பது மிகவும் அநீதியேயாகும்.

அது விஷயமாக 1934ம் வருஷம் மே மாதம் 20-ந் தேதி தாழ்த்தப்பட்டோரின் மாபெருந் தலைவரும், மாஜி சென்னை சட்டசபை மெம்பருமான உயர்திருவாளர் ஆர். வீரய்யன் தலைமையின் கீழ் நடைபெற்ற திருச்செங்கோடு தாலூக்கா ஆதித்திராவிட 3-வது மகாநாட்டில் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அதை சென்னை மாகாணக்கல்வி மந்திரி Minister for Education மாகாண கல்வி ஆபிசர் Director of Public Instruction சேலம் ஜில்லா கல்வி ஆபீசர் (District Educational Officer) சேலம் செக்கண்டரி எஜுகேஷன் போர்டு பிரசிடெண்ட் முதலிய யாவருக்கும் தெரிவித்திருந்தும் நாளதுவரையில் அது விஷயமாக யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

தீர்மானம் பின் வருமாறு:— இம் மகாநாடு தாழ்த்தப்பட்ட ஜனங்களின் பிரதிநிதியாக, தாழ்த்தப்பட்ட ஜனங்களில் ஒருவரை சேலம் ஜில்லா Secondary Education Board இல் ஏற்படுத்தும்படி காருண்ய கவர்ண்மெண்டாரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

ஆகையால் கல்வி மந்திரி அவர்களும் மாகாணக் கல்வி ஆபீசர் அவர்களும் இது விஷயமாகக் கவலை எடுத்துக் கூடிய சீக்கிரம் ஷை சபையில் ஒரு ஆதித்திராவிடப் பிரதிநிதியை நியமிப்பார்களென எதிர்பார்க்கப் படுகின்றது.

# பெங்களூர் காணிக்கமாதா திருவிழாவில் அக்ரமம்

## பெண்களின் பரிதவிப்பு.

பெங்களூர் தண்டு புதுமார்க்கெட்டுக்கெதிரில் காணிக்கமாதாகோவில் என்ற கத்தோலிக்கர் கோவில் ஒன்றிக்கிறது. வருடா வருடம் நடைபெறும் காணிக்கமாதா ருவிழா சென்ற 8-9-34ந்தேதி சனியன்று நடைபெற்றது. உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர் ஆண், பெண், பாலருமாக விஜயஞ் செய்திருந்தனர். அன்று காலை முதல், இரவு வரை கண்டோன்மெண்டு முழுவதுமே ஜனத்திரளின் கோஷங்களே காணப்பட்டன. இரவு 8 மணிக்கு மேல் அழகாக அலங்கரிக்கப்பட்ட நவீன தேர்களில், ஷேமாதாவின் விக்கிரகம் ஊர்வலம் வந்தது. இவ்வூர்வலத்தில் அனேக பஜனை கோஷ்டியார் கலந்து வந்தனர். ஊர்வலத்தில் ஆண்களும், பெண்களும், சிறுபிள்ளைகளும் அதிக நெருக்கடியான இடங்களில் வெகு கஷ்டத்துடன் நடந்து வந்தனர். அக்கூட்டத்தில் ஐயோ என்றும், சீ தூறப்போ என்றும், வெறுப்பான வார்த்தைகளும், காதலான வார்த்தைகளும், இது என்ன இழவு இங்கு எதற்கு வந்தோமென்றும், குழந்தைகளின் அழுகைக்குரலுமாக பல்வேறு சப்தங்கள் கிளம்பிற்று. ஒருபுறம் உபதேசியர்களின் முணமுணப்பும் ஓயாமல் கேட்டுக்கொண்டிருந்தது. மற்றொருபுறம் வாணத்தின் சப்தமும், வேடிக்கையும் அதனாலுண்டான அருவருக்கத்தக்க புகையும் காணப்பட்டது. பஜனைக் கோஷ்டியில் குடிகாரர்களின் ஆர்ப்பாட்டமும் காணப்பட்டது. இதனிடையே பெண்மக்கள் பின்பற்றும் கூட்டத்தில் சில வாலிபர்கள் துராக்கிரகமாகச்செல்லுவதும், இடித்துக்கொண்டு போவதுமாக இருந்தனர். மகம்மதியர்களில் சிலர் அது சமயம் பெண்மக்களிடம் வெகு மோசமாக நடந்துகொண்டதைப் பற்றி எழுதவும் பேச மறுக்கிறது. அதை யாராவது எதிர்த்துப் பேசினால் கலகத்திற்கும் தயாராயிருந்தனர். சுருங்கக்கூறின் அக்காக்ஷி காமப்பித்தர்களுக்குக் கனிவான ஒரு இடமாக விருந்தது. கற்பழியப்படாத பெண்டுகட்கும் அன்று ஒருவித சோரக் காற்று வீசியிருக்குமெனவும் சொல்லலாம். அன்று இவ்வூரிலுள்ள குச்சுக்காரிகட்கும் ஒரு சிறந்த சந்தர்ப்பம் வாய்த்தாற்போலிருந்தது. இக்கோரத்தைக்கண்ட சில கத்தோலிக்கர் உண்மையிலேயேஇந்த சாமிக்கும் கண்ணில்லை என்பதாகவும், இந்த அக்ரமங்களையெலாம் பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு பக்ஷபாதமற்ற கடவுள் உண்டா என்றும் சந்தேகிக்கலாயினர். இத்திருவிழாவன்று மெழுகுவர்த்தி, சாம்பிராணி, புஷ்பம் முதலியவைகளை விலையுங்கூட அதிகரித்து விட்டன. பக்தர்கள் கொண்டுபோகும் கொளுத்திய வர்த்தியை உடனே அணைத்து அந்த வர்த்திகளை விற்று வேறு சிலர் பணமாக்கியும் எப்பமிட்டனர். அவ்வாறே மாலைகளும் விற்கப்பட்டன. இதுவல்லாமல் காணிக்கையென்ற முறையில் செம்புகாசு முதல், வெள்ளிப் பணம் வரையிலும் வாங்கப்பட்டன. இத்தகைய திருவிழாக்கள், பாடுபட்டுழைக்கும் பாமர மக்களின் பணங்களைப் பகற்கொள்ளையடிப்பதற்கும், பெண் இனத்தை சீர்கெடச் செய்யவும்; விபசாரித்துவத்திற்கு தூண்டவும் ஏதுவாயிருக்கிறது. இவைகளுக்குக் காரண பூதமாயிருக்கும் மதமும், கடவுள்களும் மாழ்வதெக் காலம்.!

(நிருபர்)

# தோழர் வி. வி. இராமசாமியும், விருதுநகரும்.

(தோழர் P. V. விநாயகமூர்த்தி)

விருதுநகர் டவுன் மூன்று வருடங்களுக்கு முன் எந்நிலையில் இருந்தது? இன்று எந்நிலையில் இருக்கிறது? என்பதைச்சிறிது கவனிப்போம். ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து டவுனுக்கு ஜட்காவில் பிரயாணம் செய்பவர்கள் மண்டையில் 4 இடங்களில் காயமும் புஜத்தில் இரண்டு இடியும் அவசியம் எல்லோருக்கும் கிடைக்கும். ரோடுகள் ஓரிடத்தில் இரண்டடி பள்ளமாகவும், ஓரிடத்தில் மூன்றடி மேடாகவும் அப்பளம் நெளிந்தது போலிருக்கும். முதல் வேலையாக தோழர் ராமசாமி சேர்மனாக வந்தவுடன் இதைச் செப்பனிட்டு பாண்டேஜ் போடுவதை நிறுத்தினார். 2வதாக அவர் செய்த வேலைதான் விருதுநகர் முனிசிபல் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கது. ஜனங்களுக்கு ஜீவநாடி போன்ற தண்ணீர் வசதியை உண்டுபண்ணியது. பங்குனி சித்திரை மாதங்களில் விருதுநகரில் கிணற்றை எட்டிப்பார்த்தால் வெளியூர் வாசிகள் அவசியம் பயந்து விடுவார்கள். ஏன்? அவ்வளவு ஆழம் அக்கிணற்று ஊற்றுவாயில் கட்டிலை வைத்துக்கொண்டு தண்ணீர் சேமித்த காலமும் உண்டு. ஆனால் தோழர் ராமசாமி காலத்தில் எங்கே பார்த்தாலும் தண்ணீர். பேரிங்பைப் முறை ஒவ்வொரு தெருவிலும் சந்திலும் ஏற்படுத்தி மக்களின் மனதைக்குளிரச்செய்தார். அதோடு சமீபத்தில் ஓடும் அர்ஜுனா நதியிலிருந்து தண்ணீர் எடுத்து டவுன் பூராவுக்கும் குழாய்கள் வைக்கும் ஏற்பாடு தீவிரமாக நடந்து வருகிறது. இன்னும் நகரத்தில் மின்சார விளக்குகள் இவரது பெரும் பிரயாசையால் முடிவடைந்து விருதுநகர் இரவெல்லாம் பகலாய் இருக்கிறதை காண்பீர்கள். மற்றும் முனிசிபல் சத்திரம், ஹைஸ்கூல், எலிமெண்டரி பாடசாலைக்கட்டிடங்கள், சிறிய சந்துகளுக்கெல்லாம் சிமிண்டு ரோடுகள். முக்யமாய் பெண்களுக்கு வேண்டிய பிரசவ ஆஸ்பத்திரி இல்லாததால் அவ்வூர் வாசிகள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. மதுரைக்கே வரவேண்டியிருந்தது. ஏழைப்பெண்கள் பாடு கஷ்டம்தான். இப்போது அந்தக்குறையும் விருதுநகர், பம்பாய் வர்த்தகரும், தயாள குண சீலருமான வெ. நா. மூ. அருணசல நாடார் அவர்களின் பொருளுதவியினால் பிரசவ ஆஸ்பத்திரி கட்டிட வேலை பாதி ஆகிவிட்டது. கூடிய சீக்கிரம் முடிந்துவிடும். தமிழ் நாட்டில் எந்த முனிசிபாலிட்டியும் ஏன்? சென்னை ராஜதானியிலேயே எந்த முனிசிபாலிட்டியும், இவ்வளவு சீக்கிரத்தில் முன்னேறியிருக்காதென்றே கோபுரத்தின் மீதிருந்து சொல்வேன். இன்னும் ஜில்லா போர்டிலும் அநேக ரோடுகள் செப்பனிடும்படி செய்தும், இந்த ஜில்லாவின் முன்னேற்ற சம்பந்தமாகவுள்ள ஸ்தாபனங்களாகிய, டிஸ்டிரிக்ட் போர்டு, எஜுகேஷனல்கவுன்சில், ஆலோசனை கமிட்டிகளில் தோழர்இராமசாமி அவர்கள் அங்கம் வகித்தும் பொதுஜன நன்மையைக் கவனித்து வருவதை பொதுமக்கள் அறிந்திருப்பார்கள். எனவே தோழர் இராமசாமி அவர்களின் உழைப்பும் தமிழர்கள் அறிந்ததே. மக்கள் விடுதலையடைய வேண்டுமென்றும், மக்களிடையேயுள்ள உயர்வு, தாழ்வுகளை ஒழித்து சமதர்மத்தை பாப்புவதிலும், அரசாங்கத்தாரின் அனாவசியச் செலவுகளைக் குறைத்தும் சமுதாய சீர்திருத்தச் சட்டங்களை ஆதரித்தும் இராணுவச்செலவுகளைக் குறைத்து அதின் மூலம் மக்களின் வரிப்பளுவைக் குறைக்கவும், ஏழை மக்களுக்காக உழைக்கவும் தோழர் இராமசாமி அவர்கள், நமது மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லா தொகுதிக்கு இந்திய சட்டசபைத்தேர்தலில் ஒரு அபேட்சகராக நிற்பதால் ஒவ்வொருவரும் அன்னாரையே தெரிந்தெடுத்து அனுப்ப வேண்டுமாய்க்கேட்டுக்கொள்கிறேன்.

## மதிப்புரைகள்.

### "லீடர்"

திருச்சி, தோழர் கே. எ. அப்துல் ஹமீத் அவர்களை ஆசிரியராகக்கொண்டு ஆரம்பித்திருக்கும் "லீடர்" (மாதமிருமுறை தமிழ் வெளியீடு) பத்திரிகையின் முதல் மலரின் முதவிதழ் வரப்பெற்றோம். அதில், தான் ஒரு கொள்கையிலும் சேராமல் நடுநிலையில் நின்று பொதுவாக எல்லா மக்களுக்கும் பாடு படுவதாக விளக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைகள் அருகியுள்ள நம் நாட்டில் "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு". என்பதற்கிணங்க எத்தகைய கொள்கையுள்ள பத்திரிகைகள் தோன்றினும் அதனை வரவேற்க வேண்டியது நமது கடமையென்ற முறையில் நாமும் அதனை (லீடரை) அன்புடன் வரவேற்கின்றோம்.

வருடசந்தா உள்நாடு ரூ. 1—0—0

" வெளிநாடு ரூ. 1—4—0

விலாசம்:— மானேஜர்

"லீடர்" திருச்சி.

### "நகர தூதன்"

திருச்சி உறையூர் தோழர் எம். திருமலைசாமி அவர்களை ஆசிரியராய்க் கொண்ட "நகர தூதன்" வார வெளியீட்டின் நான்காம் போரின் முதல் வெற்றி அதாவது நான்காமாண்டின் முதலிதழ் வரப்பெற்றோம்.

இது சிறப்பாக திருச்சி, ஸ்ரீரங்கம் நகரங்களின் நன்மைக்காகவும் பொதுவாக திருச்சி ஜில்லா வாசிகளின் உரிமைகளுக்காகவும் உழைத்து வெற்றி கொண்டுள்ளதென்பது அனைவரும் அறியாததல்ல. அப்படியிருந்தாலும் சுயமரியாதைக் கொள்கைகளையும், சமதர்மக்கொள்கைகளையும் தொழிலாளர்களின் உரிமைகளையும் ஆண்மையுடன் வெளிப்படுத்தி வருகிறது. இந்நான்காம் ஆண்டில் 12 பக்கங்களிலிருந்து 16 பக்கங்களாக்கி மாகாணப்பொதுச் செய்திகளையும் வெளியிடப் போவதாக ஆசிரியர் அறிவித்துள்ளார். பொதுமக்கள் இதனை அன்புடன் ஆதரிக்கக் கோருகிறோம்.

வருடசந்தா ரூ. 3—0—0

விலாசம்:— மானேஜர்

நகர தூதன் உறையூர், திருச்சி.

### "சுதந்திரம்"

ஒரு தேசீய மாத வெளியீடு

புதுச்சேரி தோழர் வி. சுப்பையா அவர்களை ஆசிரியராகக் கொண்ட "சுதந்திரம்" என்னும் பத்திரிகை முதல் மாலையின் 3, 4ம் மலர்கள் வரப்பெற்றோம். இதில் நம் தேசமக்களின் உயர்வு தாழ்வுக்(தீண்டாமை) கொடுமைகளைப்பற்றியும், பெண்ணடிமை விடுதலையைப் பற்றியும், பழைய மூடப்பழக்க வழக்கங்களால் மக்களுக்கேற்படும் மானக்கேடு, பணச்செலவு, வீண்காலப்போக்கு முதலிய கேடுகளைப்பற்றியும் நன்கு மக்கள் உணர்ந்துகொள்ளக்கூடிய எளிய செந்தமிழ் நடையில் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. 60 பக்கங்கள் கொண்ட நல்ல அழகிய புஸ்தக வடிவமுடையது.

வருடசந்தா உள்நாடு ரூ. 1—0—0

" வெளிநாடு ரூ. 1—8—0

விலாசம்:— மானேஜர்

"சுதந்திரம்" தூய்ப்ளெக்ஸ்வீதி புதுச்சேரி.

### பெண்ணுரிமைக் கீதங்கள்.

இஃது சமதர்மத் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் 1932ல் காங்கிரஸ் சட்டமறுப்பிலீடுபட்டு சிறைவாசம் பெற்றிருந்த காலத்தில் செய்ததாகும்.

உலக மக்களில் சரிபாதியாகிய பெண்மக்களை ஆண்கள் அடிமைகளாக்கி மாக்களினும் இழிவாய் நடத்துவதைக் கண்டித்தும், கல்வியுரிமை, சொத்துரிமை, மணவுரிமை, பேச்சுரிமை, வாழ்க்கையுரிமை முதலியவுரிமைகள் ஆண்களுக்கிருப்பது போலவே பெண்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென்றும், தம்முரிமைகளுக்காகப் பெண்மக்களே முக்கியமாய்ப் பாடுபட முன்வர வேண்டுமென்றும் உணர்ச்சியும் ஊக்கமும் உண்டாக்கத்தக்க இனியகீதங்கள். விலை அணு 1.

கிடைக்குமிடங்கள்:—

R. கிஷன் கோயமுத்தூர்

குடியரசு பதிப்பகம் ஈரோடு.

### நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை.

இந்நவீன நாடகச்சுவடி, தோழர் கோவை அ அய்யாமுத்து அவர்களால் இயற்றப்பெற்றது. தோழர் அய்யாமுத்து அவர்களை தமிழுலகில் அறியாதாரில்லையென்றே சொல்லலாம். அத்தகைய அறிஞரால் செய்யப்பட்ட இந்நூலில், ஒரு வரையறையின்றிப் பல பெண்டாளுவோனடையும் கேடுகளையும், பொருள் நிமித்தம் பல புருடருடன் நட்புச்செய்வதாலுளதாகும் கேடுகளையும், மித்திர பேதத்தாலுளதாகும் தீமைகளையும், ஆண் பெண்பாலர்கள் தங்கள் மணவினை விஷயத்தில் ஆர அமர யோசித்து தீர விசாரித்து நன்றென்று கண்டபின்னரே துணைவரைக்கொள்ள வேண்டும் என்னும் அவசியத்தையும், காதல் மணம், கலப்புமணம் ஆகிய இவற்றின் சிறப்புகளையும் போலீஸ் அதிகாரிகளின் அட்டூழியங்களையும், முதலாளிகள் ஜமீன்தார்களின் பிரயாசையற்ற (ஏழைகளின் உடம்பைச்சாறுப்பிழிந்து சேகரித்த) பொருள்கள் எப்படி வீணாகச்சிந்திச் சிதறடிக்கப்படுகிறதென்பதையும், நன்கு விளக்கித்தத்ரூபமாக மக்கள் மனதில் அப்படியே பதியும்படியாகத் தெள்ளிய இனிய செந்தமிழ் நடையில் நாடகரூபமாக செய்யப்பட்டுள்ளது.

விலை அணு 8.

விலாசம்—

அ அய்யாமுத்து

காதி வஸ்திராலயம் திருப்பூர்.

குடியரசு பதிப்பகம் ஈரோடு.

### சமதர்ம கீதங்கள்.

இஃது சமதர்மத் தோழர் ப. ஜீவானந்தம் அவர்களால், சமதர்மக்கொள்கைச்சிறப்பையும், தொழிலாளர் துயரத்தையும், அத்துயரம் போக்க வழியையும், சமதர்மத்திருநாடாகிய ரஷியாவின் பெருமையையும், மக்களை முன்னேறவொட்டாமல் தடுக்கும் மதக்கொடுமைகளையும் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டி இனிய கீதங்களால் பாடப்பெற்றது. விலை 6 பை.

கிடைக்குமிடங்கள்.—

குடியரசு பதிப்பகம் ஈரோடு

சமதர்மகாரியாலயம்

ஜோலார்பேட்டை.

### விதவையர் விடுதலை முழக்கம்.

இஃது முத்துராமலிங்கபுரம் சுயமரியாதைப் பாவலர் தோழர் தி. அ. வேங்கடசாமி அவர்களால் ஆக்கப்பெற்று கல்லூரணி சுயமரியாதைத் தோழர் க. அ. புன்னைமுத்து அவர்களின் முகவுரை கொண்டது.

இதில் சிறப்பாக விதவா விவாகத்தின் அவசியத்தைப்பற்றியும், பொதுவாகப் பெண்ணுரிமையைப்பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. புதிய வர்ணமெட்டுகள் விலை அணு 1.

கிடைக்குமிடம்:—

க. அ. புன்னைமுத்து அவர்கள்

ஷாப் வியாபாரம்

கல்லூரணி போஸ்ட்.

அருப்புகோட்டை வழி


## மணமகள் தேவை.

ஆங்கிலமும், தமிழும் கற்றவரும், கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் மாதம் 70ரூ சம்பளம் பெற்று வருபவரும், 30வயதினையுடையவருமாகிய ஒரு இந்து வாலிபருக்கு சுயமரியாதைக் கொள்கைப்படிரிஜிஸ்டர் மணம் செய்து கொள்ளுவதற் கொருகன்னிப் பெண் தேவை. பெண் ஆங்கிலமும், தமிழும் கற்றறிந்ததாகவும் 22 வயதுக்கு மேல்படாததாகவும் இந்து மதப் பெண்ணாகவு மிருத்தலவசியம். தேவையுள்ளோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு கடிதம் எழுதி தெரிந்து கொள்ளவும்.

S. V. இராஜாம்பாள்

வல்லம், தஞ்சை ஜில்லா


## சுயமரியாதைக் காரர்கட்கு தனிக் கல்லரை

புதுவை உழவர்கரைப் பெரிய. சேரி, தோழர் அருள்தாஸ் அவர்களின் 5 மாதக் குழந்தை சென்ற ஆகஸ்டு- 23௳ இறந்து விட்டது. அதைக் கிறிஸ்துவர் கல்லரையில் அடக்கம் செய்ய மறுத்ததால், சுயமரியாதைக்காரர்கட்கென்று தனியாக ஓர் கல்லரையை அந்தக் கொம்மூய்ன் மேரும்—பிரஞ்சிந்திய சட்டசபைத் தலைவருமாகிய தோழர் ஆர். செல்லான்அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

இதுபற்றித் தோழர் ஆர். செல்லான் அவர்கட்குச் சுயமரியாதைக் காரர்கள் நன்றி கூறுகிறார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## விக்ரகத்தை "உதைத்த" பையன் விடுதலை.

கும்பகோணத்துக்கடுத்த தாராசுரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதஸ்வாமி கோவிலிலுள்ள ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி மூல விக்கிரகத்தை காலால் உதைத்து, இது சாமி அல்ல, கல் தான் என்று சொல்லி கீழே தள்ளியதாக இ. பி. கோ. 295 பிரிவின்படி தாலுக்கா போலீசார் ராமானுஜம் என்ற 16 வயது பையன் பேரில் கொண்டு வந்திருந்த வழக்கில் நேற்று சப் மாஜிஸ்திரேட் தீர்ப்பு கூறி, போதிய சாக்ஷியமில்லை என்றும் எதிரி குற்றவாளியல்லவென்றும் தீர்மானித்து கி. பி. கோ. 258ன்படி விடுதலை செய்தார்.


## பாரிஸ் கோல்டு நகைகள்.

இது அசல் சவரன் பொன் நகைகளைப்போலவே நெடுநாள் கருக்காமல் இருப்பதுடன் மிகவும் வேலைப்பாடு உள்ளது. இதுவேதான் நீங்கள் ஜதை 3ரூ-4ரூ கொடுத்துவாங்கியது. இந்த நகைகளை நாங்களே தயார்செய்வதால் மிக குறைந்த விலைக்கு கொடுக்கிறோம். வளையல் ஜதை 1க்கு 2-4-0 கொலுசு ஜதை 1க்கு 3-8-0 செயின் அட்டிகை 1க்கு 3-8-0 இரட்டைவடம் கோகர் ஜான் செயின் 8-8-0 முத்து பவளம் கட்டும் கம்பி தோலா 1க்கு 1-4-0 சர்ட்பட்டன்ஸ் டஜன் 1க்கு 1-0-0. 5ரூ. மேல்பட்ட ஆர்டருக்கு தபால் சார்ஜ்இனாம். 10-20ரூபாய் ஆர்டர்களுக்கு முறையே 1அணு 2அணுவீதம் கமிஷன் கொடுக்கப்படும். மொத்த வியாபாரிகள்தேவை.

**ஆர். கே. சாமி & சன்ஸ்,**

63 தெலுங்குவீதி, கோயமுத்தூர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சையால் கட்டுப்படுத்த முடிந்தது. ஆசியாவில் அங்குமிங்கும் இன்றைக்கும் பிளேக் நோய் பரவிவந்தாலும், அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் பிளேக் நோயைத் தலைகாட்ட வொட்டாமல் செய்ய நேரிட்டது. மதங்களின்படி மக்களைக்கொன்ற மகாமாரி, எலியைக்கொன்றால் தானும் கொல்லப்படுகிறாள். சில இடங்களில் அழுக்கையும், நாற்றத்தையும் வறுமையையும் நீக்கினால், மகாமாரியும் நீங்கிவிடுகின்றாள்!!

குளிர் சுரமென்று கூறும் Malaria வையும் தேவதைகளால் உண்டாவதாக மதங்கள் கூறுகின்றன. சுரம் அனேக வகைத்து. குளிர் சுரம், இதுவோர் சுரமாகும். அடுத்து அடுத்தும், அல்லது முறையாகவும் இந்த சுரம்வரும். மதங்கள் இந்தச்சுரத்திற்கு மஞ்சள் கந்தையில் காலணாவைச் சுற்றி கையில் கட்டினால் இந்தச் சுர அம்மாவுக்குப் பிரீதி உண்டாகி இந்த சுரத்தை நீக்குவாள் என்று மதகற்பனையை க்கையாண்டு வந்தனர் நமது இந்திய மக்கள். ஆனால் மஞ்சள் சுற்றியும், தேங்காய் உடைத்தும் கற்பூரம் கொளுத்தியும் வருஷா வருஷம் நமது மக்களில் இந்த சுரத்தால் 50 லட்சம் பேர் மாள்கின்றனர். இந்த மாபெரும் மதப்பொய்யால் லட்சக்கணக்கான மக்களை இந்தப் பொய்ப் பிடாரிக்குக் காவு கொடுத்து வருகின்றோம்! சென்ற 30, 40 வருஷங்களுக்கு முந்தித்தான் இந்தக் குளிர் சுரத்தின் காரணத்தை விஞ்ஞானம் கண்டறிந்தது. குளிர் சுரம் கொண்ட மக்களின் இரத்தத்தைப் பரிசோதனை செய்து வந்ததில், அதில் ஒரு சிறு கிருமி இருக்கக்கண்டார்கள். அதே கிருமியை, Mosguito என்னும் கொசுக்களிலும் வாழ்வதையும் கண்டார்கள். கொசுவால் கடியுண்டவர்களுக்கு மாத்திரம பெரும்பான்மையாக இந்தக் குளிர் சுரம் வருவதையும் கண்டு கொண்டார்கள். இந்தக் குளிர் சுரக் கிருமிக்கு குனின் என்ற ஓர் வேம்பு, சத்துருவெனவுங்கண்டார்கள். குளிர் சுரமும், விஞ்ஞான சிகிச்சைக்கு உட்பட்டது. இந்த சிகிச்சையால் கோடான கோடி மக்கள் இக்கொடிய நோயினின்று மீண்டுவருகின்றார்கள். விஷயங்களை விசாரித்து உணராத மதங்கள், எண்ணக்கூடாத மக்களை விஷ சுரத்திற்குக் காவுகொடுக்துவரச் செய்தன, ஆனால், விஞ்ஞானமோ, பொறுமையுடன் விசாரித்ததுடன், சாந்தமுடன் விடாமுயற்சியுடன் சம்பவங்களின் இயற்கைக் காரணங்களைக் கண்டு பிடிக்க முயன்று, நோயற்ற வாழ்வை மக்கள் அடையும் ஞானத்தைத் தெரிவித்து வருகின்றது.

ஆனால் மூட மதங்களால் மக்களைக் காப்பது போய், மக்களை மடிய வைத்துக்கொள்ள நேரிட்டது.

ஒரு காலத்தில் மக்கள் நோயால் அவதிப்பட்டுவரும் பிரச்சினை, பிரபஞ்சப் பிரச்சினையாய் இருந்தது. இன்று இந்தப் பிரச்சினையை விஞ்ஞானம் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து விட்டது. மழை, காற்று, புயல், வெள்ளம் முதலிய பிரச்சினைகளை மதங்களின் கையிலிருந்து பிடுங்கி அந்தப்பிரச்சினைகளுக்கும் ஆதாரங்களைக் கண்டுபிடித்து வருகிறது. மற்ற பிரபஞ்சப் பிரச்சினைகளுக்கு என்ன முடிவு விஞ்ஞானம் தெரிவிக்கின்றதென்று பார்ப்போம்.

விஞ்ஞான முறை ஏதோவோர் அற்புத முறை என்று எண்ண வேண்டியதில்லை. நாம் தினந்தோறும் சாதாரண விஷயங்களுக்கு உபயோகப்படுத்தும் முறையே விஞ்ஞானம் கையாளும் முறையாகும். தண்ணீர் குளிர்ந்து இருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்குக் குடித்துப் பார்க்கின்றோம், அல்லது தொட்டுப் பார்க்கின்றோம். ஜலம் உப்பு ஜலமா, அல்லது நல்ல ஜலமா என்று தெரிந்துகொள்ள குடித்துப் பார்க்கின்றோம், அல்லது காய்ச்சிப் பார்க்கின்றோம். பால் நல்ல பாலா, அல்லது ஜலம் விட்ட பாலா என்று தெரிய, மீட்டர்போட்டுப்பார்க்கின்றோம். கரி ருசி அறியவேண்டுமானால், நாக்கில் ருசித்துப் பார்க்கின்றோம். இதைப்போன்றே எந்தப் பொருளின் குணங்களையும் தெரிந்து கொள்ள விஞ்ஞானம் அப்பொருள்களைப் பரீட்சித்துப் பார்த்து வருகின்றது. ஆனால் பொருள்களில் பல, மிகவும் நுட்பமாக இருப்பதால் பலவித நுட்ப கருவிகளைக்கொண்டு விஞ்ஞானம் பரீட்சித்துப் பார்க்கின்றது எதுபோலெனில், பாலின் சுத்தத்தை மீட்டரைக்கொண்டு பார்ப்பது போலவே.

நமது பிரபஞ்ச முதல் பிரச்சினையாகிய பிரபஞ்ச மென்றால் என்ன? மதங்கள் கூறும் பிரபஞ்சமென்ன? விஞ்ஞானம் அறிந்துள்ள பிரபஞ்சமென்ன? இதைக் கண்டறிவோம். சராசரம் என்று சொல்லப்பட்ட எல்லாப் பொருள்களும் பிரபஞ்சமென்று இந்திய மத நூல்களில் கூறப்பட்டுள்ளது. சரம், அசரம், அதாவது உயிருள்ள பொருள்களும், உயிரற்ற பொருள்களும் அடங்கியது எதுவோ, அதுவே பிரபஞ்சமாகும். இது வேதாந்திகளுடைய உத்தேசம். ஆனால் அசரப் பொருள்கள் இன்னவை என்று தெரிந்து கொண்டார் இல்லை. பிரபஞ்சத்தில் உள்ள பொருள்கள் கோடி கோடி கோடியாயிரங்கோடியில் உயிருள்ள பொருள்களை மதிப்பதற்கில்லை. பிரபஞ்சத்தில் உயிருள்ள பொருள்கள் அவ்வளவு சிறுபான்மை என்று அறிதல் வேண்டும். இந்த அற்ப உயிருள்ள வஸ்துக்களில் மனிதனும் ஓர் அற்ப உயிர். ஆதலின் அசரப்பொருள்கள்தான் பிரபஞ்சத்தில் பெரும்பான்மையாக உள. இந்த அசரப்பொருள்கள் யாவை? இதனை மதஸ்தர்களுக்காகிலும், அல்லது வேதாந்திகளுக்காகிலும் தெரியா. விஞ்ஞானமொன்றே பிரபஞ்சத்திலுள்ள அதாவது அடங்கியுள்ள பொருள்களை ஒருவாறாக அறிந்துளது. இதனை விபரமாகத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் வான நூல்களில் அறிந்துகொள்ளலாம். தெரிந்தவரையில் அதாவது கண்களாலும், ஆகாய ஆயுதக்கருவிகளாலும் கண்டுள்ள பிரபஞ்சப் பொருள்கள் என்னவை என்று பார்ப்போம். (தொடரும்)

நச்சுப்பொய்கை அல்லது
நாரியர் வேட்கை.
(ஒரு நவீன நாடகம்.)
ஆக்கியோன்:
தோழர் சி. எ. அய்யாமுத்து அவர்கள்.
இதன் விலை அணா 8.
முன்பணம் அனுப்பவும். வி. பி. இல்லை.
தபால் செலவு இனம்.
விலாசம்:— மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி
யானைக்கால் குஷ்டம்
ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா.

அறிவியக்கப் பத்திரிக்கைகள்.
—0—
நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு
"தமிழன்"
ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருகிறது.
வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0
மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கோட்டாறு, நாகர்கோவில்.

"தமிழன்"
ஓர் உயரிய சுயமரியாதைத்
தமிழ் வாரப்பத்திரிகை.
தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டுஇரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.
வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளிநாடு ரூ. 5—0—0
விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார்தங்கவயல்.

# பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும் உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது.
விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.
விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

## பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

## குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம்.
விலை அணா 6.

## பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி சேனிக்யூ அவர்கள் தம் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

## பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

## மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது
விலை அணா 3.

## "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இது, நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பனபோன்ற பல அரிய விஷயங்களைக்கொண்ட சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

## நான் நாஸ்திகன் ஏன்?

(பகத்சிங் எழுதியது.)

இப் புத்தகமானது தோழர் பகத்சிங், அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானார் என்பதுபற்றியும், ஏன் நாஸ்திகரானார் என்பது பற்றியும் லாகூர் சதிவழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணா 3.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்
லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)
விலை அணு 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கைவீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.
விலை அணு 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரப்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணு 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.
விலை அணு 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணு 4.
அயோத்தியாகாண்டம் அணு 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணு 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணு 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணு 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல்.
விலை அணு 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணு 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ்சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணு 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணு. வேண்டுவோர் $1\frac{1}{4}$ அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.
விலை அணு 2.

## பர்னாட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னாட்ஷா அவர்கள் அமெரிக்காவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும்.
விலை அணு 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணு ½.

## மநுநீதி விளக்கம்.

விலை அணு 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணு 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணு 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணு 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணு 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணு 2.

## சோதிடப் புரட்டு

விலை அணு 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணு ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.